ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




செவ்வாய் ❖ பிப்ரவரி. 06, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 119 ❖ ரூ.10

## நாடாளுமன்ற தேர்தலில் இரட்டை இலையில் தான் போட்டி

# அட்டாக்



## தோல்விகளுக்கு பொறுப்பேற்று கே.பழனிசாமி ராஜினாமா செய்ய வேண்டும். இல்லையென்றால் தொண்டர்கள் உங்களை தூக்கி எறிவார்கள்; ஓபிஎஸ்



புதுக்கோட்டை, பிப். 6–

“கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் எடப்பாடி கே.பழனிசாமியை முதல்வர் வேட்பாளராக அறிவித்தது, நான் செய்த பாவம்’’ என்று புதுக்கோட்டையில் நடந்த தனது அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உருக்கத்துடன் கூறினார்.

ஓ.பன்னீர்செல்வம் மாவட்டங்கள் தோறும் தொண்டர்கள் உரிமை மீட்பு குழு கூட்டம் நடத்தி மக்களவைத் தேர்தலுக்கு தயாராகி வருகிறார். புதுக்கோட்டை மாலையீட்டில் உள்ள மண்டபத்தில் புதுக்கோட்டை மாவட்ட தொண்டர்கள் உரிமை மீட்பு குழு கூட்டம் நடந்தது. வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜசேகரன் தலைமை வகித்தார். முன்னாள் எம்எல்ஏ ரெத்தினசபாபதி,ஞான. கலைச்செல்வன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஓபிஎஸ் அணி இணை ஒருங்கிணைப்பாளர் முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம், துணை ஒருங்கிணைப்பாளர் எம்எல்ஏ மனோஜ்பாண்டியன், ஓபிஎஸ் அணி கொள்கை பரப்பு செயலாளர் புகழேந்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஓ.பன்னீர்செல்வம் பேசியது: "அதிமுகவை எம்ஜிஆர் 1972–ம் ஆண்டு உருவாக்கியபோது பல சட்ட விதிகளை உருவாக்கினார். அதில் ஒரே ஒரு விதியை மட்டும் காலத்துக்கும் மாற்றமுடியாத வகையில் உருவாக்கினார். அது என்னவென்றால், தொண்டர்கள் மூலமாக தேர்தல் நடத்தி நிர்வாகிகளை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதுதான். ஆனால், கே.பழனிசாமி சர்வாதிகாரி போல் எம்ஜிஆர் தொண்டர்களுக்காக உருவாக்கிய எந்த காலத்திலும் மாற்றமுடியாத சட்டவிதியை காலில் போட்டு மிதித்து மாறிவிட்டார். மாவட்டச் செயலாளர்களை விலைக்கு வாங்கி இந்த திருத்தத்தை அவர் செய்துள்ளார்.



ஆனால், அவரால் தொண்டர்களை விலைக்குவாங்கமுடியாது. தொண்டர்களுக்கு அவர் செய்த துரோகத்துக்காக அவரை அதிமுகவில் இருந்து மட்டுமில்லாது அரசியலில் இருந்தே ஓட ஓட விரட்டியடிப்பேன். ஜெயலலிதா என்னை இரண்டு முறை முதலமைச்சராக நியமித்தார். நானும், எப்படி அந்த பொறுப்பை கொடுத்தாரோ அப்படி அவரது காலில் விழுந்து ஆசீ பெற்று மீண்டும் ஒப்படைத்துவிட்டேன். அதுபோல்,சசிகலா,கே. பழனிசாமிக்கு முதல்வர் பதவி கொடுத்தார். ஆனால், இவர் திருப்பி கொடுத்தாரா? அது கூட பரவாயில்லை. அரசியல் நாகரிகம் இல்லாமல் கீழ்தரமாக சசிகலாவை விமர்ச்சிக்கிறார். அவரை கட்சியில் சேர்க்க ஒரு சதவீதம் கூட வாய்ப்பில்லை என கூறுகிறார்.

கே.பழனிசாமி பல தியாகங்களை செய்தாக கூறுகிறார். முதல்வர் ஆகுவதற்கு முன் இவரை யாருக்காவது தெரியுமா? ஜெயலலிதா மறைந்த பிறகு கட்சி ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதற்காக மீண்டும் கே.பழனிசாமியிடம் இணைந்தேன். அவரை கடந்த சட்டசபை தேர்தலில் முதல்வர் வேட்பாளராக அறிவித்ததுதான் நான் செய்த பாவம். இவரது தலைமையில் 8 முறை அதிமுக தேர்தலை சந்தித்துள்ளது. ஒரு முறை கூட வெற்றி பெறவில்லை. தோல்வி மேல் தோல்விகளை சந்தித்து வருவதால் தற்போது மக்களவைத் தேர்தலுக்காக கூட்டணி பேச்சுவார்த்தைக்கு 5 பேர் கொண்ட குழு அமைத்துள்ளார்.

ஆனால்,ஒருகட்சிகூட அவர்களிடம் கூட்டணி பேச்சுவார்த்தைக்கு வரவில்லை. ஜெயலலிதா இருந்தபோது தேசிய தலைவர்கள் அவரது வீட்டுக்கு கூட்டணிக்காக தவம் கிடந்தார்கள். ஆனால், அப்படியிருந்த கட்சியின் கம்பீரத்தை கே.பழனிசாமி கபளீகரம் செய்து மதிப்பில்லாத கட்சியாக்கி வருகிறார். என்றார்.

கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஓ.பன்னீர்செல்வம் நல்லாட்சியை தந்து கொண்டிருப்பதால் மூன்றாவது முறையாக பாரதிய ஜனதா கட்சி தான் மத்தியில் ஆட்சி அமைக்கும் பிரதமர் நரேந்திர மோடி பிரதமர் ஆவார். அதில் எங்கள் தலைமையிலான அதிமுக முக்கிய பங்காற்றும். நாடாளுமன்ற தேர்தலில் எங்கள் தலைமையிலான அணி கண்டிப்பாக இரட்டை இலை சின்னத்தில் தான் போட்டியிடும் என்று தெள்ளத் தெளிவாக தெரிவித்தார்.






# இன்று

# 6-2-24



சர்வ ஏகாதசி

வசைப்புரம் அலங்கார செல்வி அம்மன் கோயில் – நாகதோஷம் நீங்கும்.

சக வருடம் 1945 மாகம் 17

| சோபகிருது தை 23 | FEB - TUE செவ்வாய் | ரஜப் 25 தேய்பிறை 037 / 329 |
|---|---|---|

தேய். ஏகாதசி 14.59 (மா. 12.36) மூலம் 53.07 (கா. 03.51) தியாஜ் 13.30, 48.50 அமிர்த 53.07 மேல் சித்த. ஸர்வ ஏகாதசி. ஸ்ரீரங்கம் நம்பெருமாள் சந்தன மண்டபம் எழுந்தருளி அலங்காரத் திருமஞ்சன சேவை. திருமாலிருஞ்சோலை ஸ்ரீகள்ளழகர் புறப்பாடு.

| நல்லநேரம் | கௌரி.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 7.30-8.30 | 10.30-11.00 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை: 4.30-5.30 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; மகர லக்னம் இருப்பு நா. 1 வி. 16; சந்திராஷ்டமம் கார்த்திகை; கரணம் : 7.30-9; சூரிய உதயம் : 6.36

இரண்டு ஓடத்தில் கால் வைக்காதே

**இராசிபலன்**

மேஷம் - ஆக்கம்
ரிஷபம் - உயர்வு
மிதுனம் - போட்டி
கடகம் - சினம்
சிம்மம் - கோபம்
கன்னி - பாராட்டு
துலாம் - தனம்
விருச்சி - சுகம்
தனுசு - சிக்கல்
மகரம் - ஆதரவு
கும்பம் - மறதி
மீனம் - செலவு

## சிந்திப்போம்.... செயல்படுவோம்











காரைக்குடி அடுத்த அமராவதிபுதூர் ஸ்ரீ ராஜ ராஜன் சி.பி.எஸ்.இ பள்ளி மாணவர்கள் புங்கை, புளி, வேம்பு, விதைகளை விதைப்பந்தாக செய்து சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரிக்கு வழங்கினார்கள். அதை பள்ளியின் முதல்வர் மெ.வடிவாம்பாள், கல்லூரியின் முதல்வர் கருணாநிதியிடம் வழங்கினார். உடன் பள்ளி தமிழாசிரியர் டாக்டர்.பாஸ்கர். மேலும் மாணவர்களின் சிறந்த சமூக மற்றும் வேளாண்மை சேவையை கல்லூரியின் முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினார்கள். மென்மேலும் பல சமூக சேவைகள் செய்ய வேண்டுமென மாணவர்களை வாழ்த்தினார்கள்.

## மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு தேவையான நிரந்தர தீர்வை ஏற்படுத்தி தர வேண்டும் : தினகரன் வலியுறுத்தல்

சென்னை : பிப். 6–

மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு தேவையான நிரந்தர தீர்வை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தனது சமூகவலைத்தள பக்கத்தில், எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி கைது செய்யப்பட்டு பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் சென்னை காசிமேடு பகுதியைச் சேர்ந்த 6 மீனவர்களை உடனடியாக மீட்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.



குஜராத் மாநிலத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த சென்னை காசிமேடு பகுதியைச் சேர்ந்த மீனவர்களின் படகில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக திசைமாறி பாகிஸ்தான் எல்லைக்குள் சென்றதால் அந்நாட்டு கடலோர காவல்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். தமிழக அரசிடமும், மீன்வளத்துறை அதிகாரிகளிடமும் பலமுறை புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், பாகிஸ்தான் சிறையில் ஒரு மாதத்திற்கும் மேலாக சிக்கித் தவிக்கும் காசிமேடு மீனவர்களை மீட்டுத்தருமாறு அவர்களின் குடும்பத்தினர் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேபோல, வங்கக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 23 பேரை, எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி கைது செய்திருக்கும் இலங்கை கடற்படையினரை கண்டித்து மீனவர்கள் அனைவரும் கடலுக்கு செல்லாமல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். எனவே, பாகிஸ்தான் மற்றும் இலங்கை சிறைகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் தமிழக மீனவர்களை மீட்பதோடு, இனிவரும் காலங்களில் எவ்வித அச்சமுமின்றி மீனவர்கள் தங்களின் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு தேவையான நிரந்தர தீர்வை ஏற்படுத்தித் தர வேண்டும் என மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்," என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஆண்டிமடத்தில் லயன்ஸ் சங்க மண்டல சந்திப்பு விழா



அரியலூர் : பிப். 6–

ஆண்டிமடத்தில் லயன் சங்க மண்டல சந்திப்பு விழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி, ஆண்டிமடம் - கவரப்பாளையத்தில், பன்னாட்டு லயன்ஸ் சங்கங்கள், எழில் மொழி மண்டல சந்திப்பு விழா நடைபெற்றது. மண்டலத் தலைவர் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற, விழாவில் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் லயன் சங்க மாவட்ட ஆளுநர் இமயவரம்பன், சிறப்பு விருந்தினர்கள் ஆர்த்தி, சீனிவாசன், மற்றும் பல்வேறு லயன்ஸ் சங்க நிர்வாகிகள்,உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## பொன்மாரி வித்யாலயா மெட்ரிக் பள்ளி 20–வது ஆண்டு விழா எம்எல்ஏ சின்னதுரை பங்கேற்பு

புதுக்கோட்டை, பிப். 6–

புதுக்கோட்டை மாவட்டம் பொம்மாடிமலை பொன்மாரி வித்யாலயா மெட்ரிக் பள்ளியின் 20-வது ஆண்டு விழா நடைபெற்றது, இதில் பொன்மாரி கல்வி நிறுவனங்களின் தலைவர் மருத்துவர் ராமதாஸ் தலைமை தாங்கினார், செயலாளர் சத்தியராம் ராமுகன்னு, வாழ்த்துரை வழங்கினார், பள்ளியின் தாளாளர் சந்திரா ரவீந்திரன் வரவேற்புரை ஆற்றினார்,



சிறப்பு விருந்தினராக கந்தர்வக்கோட்டை சட்ட மன்ற உறுப்பினர் சின்னதுரை, மாணவர்கள் பயிலும் போது கல்வியில் முழு கவனத்துடன் இருப்பதுடன் நாட்டுப்பற்றுடனும் இருப்பது அவசியம், தலைமை பன்புகளை நீங்கள் வளர்த்துகொண்டு அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்று விழாவில் சிறப்புரையாற்றினார். பின்னர் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது, மாணவ மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் அரங்கேறியது, அறங்காவலர்கள் நிலவை பழனியப்பன், பொன்னையா, மருத்துவர்கள் ரவீந்திரன், பீட்டர், செந்தமிழ் வீனா, மற்றும் திருவேங்கடம், அண்ணாமலை, அறங்காவலர்கள், நிர்வாகிகள், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள், இவ்விழாவில் பள்ளியின் முதல்வர் ஜெயராணி, மக்கள் தொடர்பு அலுவலர் ஜெகன், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ, மாணவியர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## இரண்டு மாதங்களாக சம்பளம் வழங்காததைக் கண்டித்து தூய்மைத் தொழிலாளர்கள் போராட்டம்

புதுக்கோட்டை : பிப். 6–

கடந்த இரண்டு மாதங்களாக சம்பளம் வழங்காததைக் கண்டித்து தூய்மைப் பணியாளர்கள் புதுக்கோட்டை நகராட்சி டிவிசன் அலுவலகத்தை முற்றுகையிட்டு சிஐடியு தலைமையில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.



புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 42 வார்டுகளிலும் தூய்மைப் பணி செய்வதற்காக தனியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் 288 துப்புரவு ஒப்பந்த பணியாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இவர்களுக்கு தனியார் ஒப்பந்த நிறுவனத்தின் சார்பில் மாத மாதம் 12,000 ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. சம்பளம் முறையாக வழங்கப்படாததால், சிஐடியு தொழிற்சங்கம் சார்பில் அவ்வப்பொழுது போராட்டம் நடத்திய பிறகு சம்பளம் வழங்குவது தொடர் கதையாக இருந்து வருகிறது.

இந்நிலையில், கடந்த இரண்டு மாதங்களாக சம்பளம் வழங்காததை கண்டித்து, புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில் உள்ள புதுக்கோட்டை நகராட்சி 7-வது டிவிசன் அலுவலகத்தை முற்றுகையிட்டு 288 ஒப்பந்த துப்புரவு பணியாளர்களும் போராடட்த்தில் ஈடுபட்டனர். புதுக்கோட்டை மாவட்ட உள்ளாட்சியத் தொழிலாளர் சங்க (சிஐடியு) மாவட்டப் பொதுச் செயலாளர் கே.முகமதலிஜின்னா, துணைத் தலைவர் எம்.முத்தையா ஆகியோர் தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

சம்பளத்தை உடனடியாக வழங்க வேண்டும். பிஎப், இஎஸ்ஐ பிடித்த பணத்தை முறையாக வங்கியில் செலுத்த வேண்டும். துப்புரவு பணி செய்யும் தங்களுக்கு கைஉறை, துடைப்பம் உள்ளிட்ட உபகரணங்களை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் போராட்டத்தில் எழுப்பப்பட்டன.

நகராட்சி ஆணையர் மற்றும் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியும் கோரிக்கை நிறைவேறும் வரை வேலை செய்யமாட்டோம் என பணியை புறக்கணித்து தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

## போர் நடக்கும் போது தளபதி, தலைமையகத்தில் இருந்து தனது படையினருக்கு வழிகாட்ட வேண்டும் – பிரசாந்த் கிஷோர்

புதுடெல்லி : பிப். 6–

இவ்வருடம் ஏப்ரல்–மே மாதங்களில் பாராளுமன்றத்தின் 543 இடங்களுக்கு பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது.

2014 பொதுத்தேர்தலில் தொடங்கி அரசியல் கட்சிகளுக்கு தேர்தலில் வெல்வதற்கான வியூகங்களை அமைத்து தரும் நிபுணர்கள் முன்னிலை வகிக்க ஆரம்பித்தனர். அவர்கள் வகுத்து தரும் திட்டங்களுக்கு ஏற்ப கட்சிகள் தேர்தல் நேரங்களில் செயல்படத் தொடங்கின.

பல நூறு கோடிகளை கட்டணமாக வசூலித்த இத்தகைய அரசியல் வியூக அமைப்பாளர்களின் திட்டங்கள், சில நேரங்களில் சில கட்சிகளுக்கு வெற்றியை கொடுத்தது. தேர்தல் வியூக நிபுணர்களில்



முதன்மையானவராக கருதப்படுபவர், பீகார் மாநில ரோஹ்தாஸ் மாவட்டத்தை சேர்ந்த "பிகே" என அழைக்கப்படும் பிரசாந்த் கிஷோர்.

தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து பிகே தெரிவித்ததாவது: புலனாய்வு அமைப்புகளினால் விசாரிக்கப்பட்டு வரும் ஒரு அரசியல் பிரமுகர், பா.ஜ.க.வில் இணைந்து விட்டால், அவர் மீது நடவடிக்கைகள் நின்று விடுகின்றன. இது பிரதமர் நரேந்திர மோடி கூறி வரும் நிலைப்பாட்டிற்கு நேர் எதிரானது.

பா.ஜ.க. பெரிதளவு மோடியை சார்ந்தே இருப்பது அக்கட்சியின் எதிர்காலத்திற்கு ஆபத்தாக முடியலாம். அடுத்து வரும் தேர்தல்களில் 90 சதவீதம் பா.ஜ.க. தோற்றால் மோடி மக்களை சந்திக்க தயங்குவார். ஆனால், ராகுல் காந்தி கடந்த 10 வருடங்களில் பல தோல்விகளுக்கு பிறகும், நேர்மறையாக, தான் செல்ல நினைக்கும் பாதையிலேயே சரியாக செல்கிறார்.

ராகுலுக்கு மன உறுதி அதிகம். ஆனால், தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில் அவர் பாத யாத்திரை செல்வது சரியான முடிவு அல்ல. போர் நடக்கும் போது தளபதி, தலைமையகத்தில் இருந்து தனது படையினருக்கு வழிகாட்ட வேண்டும் என்று பிரசாந்த் கிஷோர் கூறினார்.

## சமஸ்கிருத வித்யாலயா ஓரியண்டல் உயர்நிலைப்பள்ளி மாணவி சாதனை



புதுக்கோட்டை , பிப். 6–

தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறை சார்பில்1.2.2024. முதல் 7.2.2024 வரை விளையாட்டுப் போட்டிகள் புதுக்கோட்டையில் நடைபெற்று வருகின்றன. 2023_2024 கல்வி ஆண்டிற்கான மாநில அளவிலான இறகு பந்து போட்டி புதுக்கோட்டை ஜெ.ஜெ கல்லூரியில் மாணவ, மாணவிகளுக்கு நடை பெற்று வருகிறது.பல்வேறு மாவட்டங்களில் இருந்து வருகை தந்துபல்வேறு வகையான போட்டிகளில் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டுள்ளார்கள் அந்தப் போட்டியில் சமஸ்கிருத வித்யாலயா ஓரியண்டல் உயர்நிலைப்பள்ளி மாணவி பங்கேற்றார்.

இறகுபந்து போட்டியில் 14 வயதிற்கு உட்பட்ட ஒற்றையர் போட்டியில் 9 ம் வகுப்பு சி பிரிவில் படிக்கும் மாணவி திவ்யா மாநில அளவிலான குடியரசு தின விளையாட்டுப் போட்டியில் புதுக்கோட்டை மாவட்டத்தின் சார்பாக கலந்து கொண்டு நான்காம் இடம் பிடித்தமைக்காகவும் மாநில இரட்டையர் இறகு பந்து தரவரிசை பட்டியலில் முதலிடம் பிடித்தமைக்காகவும் மாணவியை பள்ளியின் செயலர் ராஜ்குமார் விஜயகுமார் தொண்டைமான், புதுக்கோட்டை மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் தங்கராஜ் ஆகியோர் வாழ்த்தினார்கள். பள்ளியின் தலைமை ஆசிரியர் சேகர், பயிற்சியாளர் ராமன், பள்ளியின் ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் முத்துராமலிங்கம் ஆகியோர் வாழ்த்தினார்கள்.

## ரூ.152.67 கோடி மதிப்பில் 52 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

சென்னை : பிப். 6–

சென்னை மாநகராட்சியில் தற்போது குடிநீர் பிரச்சினை இல்லை என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

தமிழ்நாடு குடிநீர் வழங்கல் துறை சார்பில் 11.98 கோடி ரூபாய் மதிப்பில் முடிவுற்ற 13 திட்டப்பணிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். மேலும் 152.67 கோடி ரூபாய் மதிப்பிலான 52 புதிய திட்டங்களுக்கு அமைச்சர் உதயநிதி அடிக்கல் நாட்டினார்.



இதன் பின் அவர் பேசியதாவது: கடந்த 2015-ம் ஆண்டு பெய்த மழை பாதிப்பில் இருந்து சென்னை மீள 10 நாட்களான நிலையில், கடந்த வருடம் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து இரண்டே நாட்களில் சென்னை மீண்டு வந்துள்ளது. தற்போது சென்னை மாநகராட்சியில் குடிநீர் பிரச்சினை என்பதே இல்லை.

சென்னை மாநகராட்சியின் வளர்ச்சி, தேவைகளுக்கு ஏற்ப சிறப்பாக செயல்பட்டு வருகிறோம். சிங்கார சென்னை 2.0 திட்டத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ரூ.500 கோடி நிதி ஒதுக்கியுள்ளார். சென்னை மாநகராட்சிக்கான திட்டங்களை முதல்வர் கவனத்துடன் செய்து வருகிறார் என்று கூறினார்.

## புற்றுநோய் பாதிப்பில் ஈரோடு முதலிடம் விழிப்புணர்வு நிகழ்வில் மருத்துவர் தகவல்

ஈரோடு : பிப். 6–

தமிழகத்தில் புற்றுநோய் பாதிப்பு அதிகம் உள்ள மாவட்டங்களில் ஈரோடு முதலிடத்தில் உள்ளதாக புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் சுகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உலக புற்றுநோய் விழிப்புணர்வு தினத்தை ஒட்டி, ஈரோடு இந்திய மருத்துவ சங்கம் மற்றும் சுதா மருத்துவமனை சர்பில் புற்று நோய் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. ஈரோடு காலிங்கராயன் இல்லத்திலிருந்து எஸ்பி ஜவகர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சுதா மருத்துவமனை நிர்வாக இயக்குனர் சுதாகர், ஐஎம்ஏ முன்னாள் தலைவர் சுகுமார், செல்வா சாரிட்டபிள் டிரஸ்ட் தொண்டு நிறுவன தலைவர் பாரதி, நந்தா நர்சிங் கல்லூரி தாளாளர் நந்த குமார், பிரதீப் நர்சிங் கல்லூரி மாணவிகள் உட்பட பலர் கலந்து



கொண்டனர்.

நிகழ்வில் பங்கேற்றுப் பேசிய புற்றுநோய் சிகிச்சை நிபுணர் மரு. சுகேஸ்வரன், இந்தியாவில் புற்றுநோய்கள் அதிகம் பாதித்த மக்கள் உள்ள மாநிலங்களில் தமிழகம் ஐந்தாவது இடத்தில் உள்ளது. தமிழகத்தில் ஈரோடு மாவட்டம் புற்றுநோய் அதிகம் கொண்ட மாவட்டமாக முதலிடத்தில் உள்ளது. புகையிலை, மது, சரியான உடற்பயிற்சி இன்மை, சுற்றுச்சூழல் மாசு ஆகியவற்றால் புற்றுநோய் வருகிறது. கடந்த காலங்களில் 40 முதல் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு புற்றுநோய் ஏற்பட்டது. தற்போது 20 வயதிலேயே புற்றுநோய் ஏற்படுகிறது. அதில் 50 முதல் 60 சதவீத மக்கள் மூன்றாவது அல்லது நான்காவது கட்டத்தை எட்டிய பின், காலதாமதமாகத்தான் புற்றுநோய் பாதிப்பை அறிகிறார்கள். முற்றிய நிலையில் புற்றுநோய் சிகிச்சைக்கு வருகின்றனர். ஆரம்ப கட்டத்திலேயே புற்று நோயை கண்டறிவது அவசியம்" என தெரிவித்தார்.

## கட்சி தாவும் 15 காங்கிரஸ் எம்எல்ஏ–க்கள் மகாராஷ்டிரா அரசியலில் பரபரப்பு

மகாராஷ்டிரா, பிப். 6–

மகாராஷ்டிரா மாநிலத்தில் காங்கிரஸ் எம்எல்ஏக்கள் 15 பேர் அக்கட்சியில் இருந்து வெளியேறி ஆளும் கூட்டணியில் இணைய உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக எதிர்க்கட்சிகளின் இந்தியா கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. பல மாநிலங்களிலும் அக்கட்சியை பலவீனப்படுத்தும் வேலைகளில் பாஜக இறங்கியுள்ளது. நிதிஷ்குமார் இந்தியா கூட்டணியை விட்டு வெளியேறியுள்ள நிலையில், மம்தா பானர்ஜி காங்கிரஸ் கட்சிக்கு உரிய இடங்களை ஒதுக்க மறுத்து வருகிறார்.

இந்த நிலையில் மகாராஷ்டிராவில் காங்கிரஸ் கட்சி சார்பாக வெற்றி பெற்ற 15 எம்எல்ஏக்கள் அந்த கட்சியில் இருந்து ராஜினாமா செய்ய வாய்ப்புள்ளதாக



தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக, பாபா சித்திக் மற்றும் அவருடைய மகன் ஜீஷான் சித்திக் ஆகியோர் தேர்தலுக்கு முன்பாக அஜித் பவார் தலைமையிலான என்சிபி அணியில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மகாராஷ்டிராவில் ஏற்கெனவே சிவசேனா கட்சியை உடைத்து எம்எல்ஏக்களை இழுத்து அங்கு ஆட்சி மாற்றத்தை பாஜக ஏற்படுத்தி இருந்தது. இந்த நிலையில் தற்போது காங்கிரஸ் கட்சியையும் உடைக்கும் திட்டத்தை அங்கு பாஜக நிறைவேற்றத் தொடங்கியுள்ளது. இதனால் காங்கிரஸ் தலைமை அதிர்ச்சியடைந்துள்ளது.

## சட்லஜ் ஆற்றில் கார் கவிழ்ந்து விபத்து சைதை துரைசாமியின் மகன் மாயம்

இமாச்சல்பிரதேசம் : பிப். 6–

சென்னை முன்னாள் மேயர் சைதை துரைசாமி. இவரது மகன் வெற்றி துரைசாமி. தனது நண்பரான திருப்பூரைச் சேர்ந்த கோபிநாத் என்பவருடன் இமாச்சல் பிரதேசத்திற்கு சுற்றுலா சென்றுள்ளார். அங்குள்ள சட்லஜ் ஆற்றின் மலைப்பகுதியில் கார் சென்று கொண்டிருந்த போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த கார் ஆற்றில்



விழுந்தது.

இந்த விபத்தில் டிரைவர் பலியானார். சைதை துரைசாமியின் மகன் ஆற்று நீரில் அடித்து செல்லப்பட்டார். காரில் இருந்த கோபிநாத் காயங்களுடன் மீட்கப்பட்டார். சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் படுகாயம் அடைந்த கோபிநாத்தை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும் கார் டிரைவரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். ஆற்றில் அடித்து செல்லப்பட்டு மாயமான வெற்றி துரைசாமியை மீட்பு படையினர் தேடி வருகின்றனர்.

# வைத்தீஸ்வரன் கோவிலில் திருத்தேர் உற்சவம் திரளான பக்தர்கள் பங்கேற்பு




சீர்காழி, பிப். 6-
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே வைத்தீஸ்வரன் கோவிலில் புகழ்பெற்ற வைத்தியநாத சுவாமி ஆலயம் அமைந்துள்ளது. நவகிரகங்களில் செவ்வாய் ஆலயமாக விளங்கி வருகிறது. இங்கு செல்வ முத்துக்குமாரசாமி என்ற பெயரில் முருகனுக்கு தனி சன்னதி அமைந்துள்ளது.

புகழ் பெற்ற முருகன் ஆலயங்களில் ஒன்றான இந்த ஆலயத்தின் தை மாத உற்சவம் கடந்த 27ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் 9 ஆம் நாள் திருவிழாவாக நேற்று திருத்தேர் உற்சவம் நடைபெற்றது.

இதனை முன்னிட்டு செல்லமுத்து குமாரசாமி சிறப்பு அலங்காரங்களுடன் திருத்தேரில் எழுந்தருளினார். தொடர்ந்து மகா தீபாராதனைக்கு பின்னர் திரளான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர். தேர் நான்கு ரத வீதிகளில் வலம் வந்த பின்பு மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது.

# தமிழக வெற்றி கழகம் அரசியல் கட்சி தொடங்கியதை கேக் வெட்டி கொண்டாடிய இலத்தூர் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள்




செய்யூர், பிப். 6-
அகில இந்திய பொதுச் செயலாளர், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் புஸ்ஸி என். ஆனந்த் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத் தலைவர் செங்கை சி. சூரியநாராயணன் வழிகாட்டுதலின்படி இலத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் வெளிக்காடு சிடி.மோனிஷ்வர் பிஜி அவர்களின் ஏற்பாட்டில் செங்காட்டூர் ஊராட்சியில் அமைந்துள்ள டாக்டர். அம்பேத்கர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பிறகு அடையாளச்சேரி ஊராட்சியில் அமைந்துள்ள சமத்துவபுரத்தில் தந்தை பெரியாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

மேலும் வெளிக்காடு மற்றும் பவுஞ்சூர் பஜாரில் கேக் வெட்டி, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் இலத்தூர் ஒன்றிய இளைஞரணி, தொண்டரணி மற்றும் மாணவரணி நிர்வாகிகள், பவுஞ்சூர் ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள், திருவாதூர் ஊராட்சி நிர்வாகிகள், நெற்குணப்பட்டு ஊராட்சி நிர்வாகிகள், பரமேஸ்வரி மங்கலம் ஊராட்சி நிர்வாகிகள், விழுதமங்கலம் ஊராட்சி நிர்வாகிகள் மற்றும் பெரியவெளிக்காடு ஊராட்சி நிர்வாகிகள், நண்பர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# ஜார்க்கண்ட் பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் சம்பாய் சோரன் அரசு வெற்றி



ராஞ்சி: பிப். 6-
ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் சம்பாய் சோரன் அரசு வெற்றி பெற்றுள்ளது. 47 எம்எல்ஏக்கள் ஆதரவுடன் சம்பாய் சோரன் பெரும்பான்மை பலத்தை நிரூபித்தார்.



ஜார்க்கண்ட் மாநில முதல்வராக சம்பாய் சோரன் பதவியேற்றதை அடுத்து, அம்மாநில சட்டப்பேரவையில் நேற்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அரசுக்கு ஆதரவாக மற்றும் எதிராக உள்ளவர்கள் எழுந்து நிற்க சொல்லி நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. முதலில் அரசுக்கு ஆதரவாக உள்ளவர்கள் எழுந்துநிற்குமாறு சபாநாயகர் கோரினார். பின்னர் அரசுக்கு எதிராக உள்ளவர்கள் எழுந்து நிற்குமாறு அவர் தெரிவித்தார். அதன்படி, ஆளும் ஜேஎம்எம் கூட்டணிக்கு 47 எம்எல்ஏக்கள் ஆதரவாக உள்ளதாக கூறி நம்பிக்கை வாக்கெடுப்பில் சம்பாய் சோரன் அரசு வெற்றிபெற்றதாக சபாநாயகர் அறிவித்தார். ஆளும் கூட்டணிக்கு எதிராக 29 எம்எல்ஏக்கள் வாக்களித்தனர். இவர்கள் எதிர்க்கட்சியான பாஜக தரப்பைச் சேர்ந்தவர்கள்.

81 உறுப்பினர்களைக் கொண்ட ஜார்க்கண்ட் சட்டசபையில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க 41 உறுப்பினர்கள் தேவை. ஜார்க்கண்ட் மாநிலத்தில் மொத்தம் உள்ள 81 சட்டப்பேரவை தொகுதிகளில் ஒரு இடம் காலியாக உள்ளது. எஞ்சியுள்ள 80 இடங்களில் பெரும்பான்மையை நிரூபிக்க ஜேஎம்எம் கூட்டணிக்கு 41 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை என்ற நிலையில் 47 உறுப்பினர்கள் ஆதரவுடன் பெரும்பான்மையை நிரூபித்தார் முதல்வர் சம்பாய் சோரன். இந்த வாக்கெடுப்பில் பங்கேற்க அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரன் பலத்த பாதுகாப்புடன் அழைத்துவரப்பட்டார்.

நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன் ஜார்க்கண்ட் ஆளுநர் சிபி. ராதாகிருஷ்ணன் உரை நிகழ்த்தினார். தொடர்ந்து நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானம் கொண்டுவரப்பட்டு அதன்மீது விவாதம் நிகழ்த்தப்பட்டது. இதில் பேசிய ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரன், "ஜனவரி 31 இரவு, நாட்டிலேயே முதல்முறையாக ஒரு மாநில முதல்வர் கைது செய்யப்பட்டார். எனது கைது சம்பவத்தில் ஆளுநர் மாளிகைக்கு தொடர்பு உள்ளதாக நான் நினைக்கிறேன். நான் கைது செய்யப்பட்ட ஜன.31-ம் தேதி, இந்திய வரலாற்றில் ஒரு கருப்பு அத்தியாயமாக நினைவுகூரப்படும்.

என் மீதான குற்றச்சாட்டை முடிந்தால் நிரூபித்துக் காண்பிக்க வேண்டும். பாஜகவுக்கு தைரியம் இருந்தால் என் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலத்தின் ஆவணங்களை காண்பிக்கட்டும். சவால் விடுக்கிறேன். அப்படி நிரூபித்துவிட்டால் நான் அரசியலில் இருந்து விலகுகிறேன். ஆம், என் மீதான குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் கொடுத்தால் அரசியலில் இருந்தே விலகத் தயார். ஜார்க்கண்டில் ஆளும் கூட்டணிக்கு பெரும்பான்மை ஆதரவு உள்ளது. பழங்குடியினரை மத்திய அரசு ஏன் இவ்வளவு வெறுக்கிறது என்பது தெரியவில்லை" என்று தெரிவித்தார்.

# தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை ஆரணியில் 299 பள்ளி மாணவர்களுக்கு துரை.சந்திரசேகர் எம்.எல்ஏ வழங்கினார்

ஊத்துக்கோட்டை, பிப்6-
திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணியில் உள்ள அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் 176 மாணவிகளுக்கும், 123 மாணவர்களுக்கும் என மொத்தம் 299 மாணவர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி ஆரணி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு,பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் காவேரிஏழுமலை மற்றும் ஏகாம்பரம் ஆகியோர் தலைமை தாங்கினர்.ஆரணி பேரூர் திமுக செயலாளர் பி.முத்து,அவைத்தலைவர் ஜி.ரமேஷ்,பொருளாளர், கு.கரிகாலன், ஆரணி பேரூராட்சிமன்ற துணைத் தலைவர் வழக்கறிஞர் சுகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், சிறப்பு அழைப்பாளராக பொன்னேரி தொகுதி காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகர் கலந்து கொண்டு பள்ளி மாணவர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரையாற்றி பேசினார். மேலும், அறிவியல் கண்காட்சியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவிகளுக்கும்,சிலம்பப் போட்டியில் மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவிக்கும் நினைவு பரிசு,சான்றிதழ் வழங்கி வாழ்த்தினார்.மேலும், 100 சதவீத தேர்ச்சியை பெற்று பள்ளிக்கும்,தொகுதிக்கும் சிறப்பை சேர்க்க வேண்டும் என மாணவர்களை கேட்டுக் கொண்டார். பின்னர்,இப்பள்ளி வளாகத்தில் சுமார் 100 மீட்டர் சுற்றுச்சுவர் கட்ட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பள்ளி தலைமை ஆசிரியர் வேண்டுகோள் விடுத்தார். இதனை ஏற்று சுற்றுச்சுவர் கட்ட வேண்டிய பகுதியை பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக சட்டமன்ற உறுப்பினர் உறுதி கூறினார்.

இந்நிகழ்ச்சியில், எஸ்.எம்.சி தலைவர்கள் சத்யா, நாகலட்சுமி, இ.வி.எஸ்.ரவி, ரகுமான்கான், நிலவழகன், கலையரசி, நீலகண்டன், வி.எம்.எஸ்.விஜயகுமார், முரளி, தினேஷ், சாய்சத்யம் மற்றும் இருபால் ஆசிரியர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




▶ தென்னிந்திய மாநிலங்கள் பெங்களூரு விஸ்வேஸ்வரா தொழில்துறை தொழில்நுட்ப அருங்காட்சியகம் இணைந்து நடத்தும் தென்னிந்திய அறிவியல் கண்காட்சி ஆந்திர மாநிலத்தில் விஜயவாடா நகரத்தில் 28 ஜனவரியில் இருந்து 01 பிப்ரவரி வரை நடைபெற்றன, இதில் காரைக்கால் மாவட்ட மாணாவர்கள் தனி பிரிவில் திரு வேட்டக்குடி அரசு உயர்நிலைப்பள்ளி சஞ்சய் ஸ்ரீராம் அதன் ஆசிரியர் ராஜு சேத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளி சஞ்சனா அதன் ஆசிரியர் சவிதா கீழக்காசாக்குடி ஆச்சார்யா சிக் ஷா மந்திர் தீரஜ் அதன் ஆசிரியர் சாந்தகுமார் கலந்து கொள்ள சென்றனர், கேலக்ஸி உயர்நிலைப்பள்ளி ஜாயர் மொய்னுதீன். குழு பிரிவில் பிரைட் அகாடமி செல்லூர் சமீருதின் -ஹரிஹரன் அதன் ஆசிரியர் பார்த்திபன் ,அன்னை அபிராமி தேசிய மேல்நிலைப்பள்ளி அபினவ் ஹரன்-தஷ்வந்த் ஹரன் கலந்து கொண்டார்கள். ஆசிரியர் பிரிவில் மேல காசாக்குடி அரசு நடுநிலைப்பள்ளி கணித ஆசிரியர் சுரேஷ் கண்ணாபூர் அரசு தொடக்கப்பள்ளி ஆசிரியர் செல்வராஜ் அத்திபடுகை அரசு தொடக்கப்பள்ளி ஆசிரியர் வைத்தியநாதன் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவரும் மரியாதை நிமித்தமாக நேற்று காரைக்கால் மாவட்ட ஆட்சியரை சந்தித்து வாழ்த்து பெற்றார்கள் இக்கண்காட்சியில் மொத்தம் 210 கண்காட்சி பொருட்கள் அறிவியல் கணிதம் தொழில்நுட்ப பிரிவுகளில் காட்சிப்படுத்தப்பட்டன.




▶ செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் அடுத்த கொத்தமங்கலம் கிராம பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் நேற்று இலவச சித்த மருத்துவ முகாம் நிகழ்ச்சி நடைபெற்றது நேச்சர்ஸ் ஹார்ட் சித்த மருத்துவமனை மற்றும் ரெயின்போஸ் அறக்கட்டளை இணைந்து இலவச சித்த மருத்துவ முகாம் நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக ஊராட்சி மன்ற தலைவர் கனகாம்பாள் தலைமை ஆசிரியர் கோடீஸ்வரி ரெயின்போஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் செல்வகுமார் ஆகியோர் கலந்து கொண்டு இம்முகாமினை துவக்கி வைத்தனர் இம்முகாமில் அனைத்து பிணிகளுக்கும் நாடி எண் வகை தேர்வு பார்த்து மருந்துகள் மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் துணைத் தலைவர் குமார் ரெயின்போஸ்அறக்கட்டளை பொருளாளர் ரஜினி, டாக்டர் பிரவீன் குமரகுருமூர்த்தி, டாக்டர் சுந்தர்ராஜன், சமூக ஆர்வலர் பிச்சைமுத்து ஊராட்சி செயலாளர் முருகன், வார்டு உறுப்பினர்கள் வெண்ணிலா, வேளாங்கண்ணி, எல்லம்மாள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# குடி போதையில் தகராறு காசிமேட்டில் ரவுடி வெட்டி கொலை: 5 பேருக்கு வலை வீச்சு

காசிமேடு, பிப்.6–
சென்னை காசிமேடு பவர் குப்பத்தில் ரவுடி வெங்கட்ராமன் ( வயது 26)என்பவர் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்ட சம்பவம் காசிமேடு பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



பிரபல ரவுடியான வெங்கட்ராமன் குடிபோதையில் காசிமேடு பவர் குப்பத்திற்கு அடுத்த பிளாக்கில் சென்று ரகளையில் ஈடுபட்டுள்ளார் இதனால் அப்பகுதியை சேர்ந்த ரவுடிகள் இருவருடன் மோதல் ஏற்பட்டுள்ளது.

அப்போது அந்த பிளாக்கை சேர்ந்த ரவுடிகள் விமல் பூபாலன், உள்ளிட்ட 5 பேர் கொண்ட கும்பல் கத்தியால் சராமரியாக வெட்டிவிட்டு தப்பி ஓடி உள்ளனர் ரத்த வெள்ளத்தில் துடிதுடித்திருந்த ரவுடியை கண்ட அக்கம் பக்கத்தினர் போலீசாரக்கு தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த காசிமேடு போலீசார் ரவுடி வெங்கட்ராமனை மீட்டு அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் ஆனால் மருத்துவமனைக்கு செல்வதற்குள் ரவுடி வெங்கட்ராமன் உயிரிழந்தார் இந்த சம்பவம் குறித்து தலைமறைவாக உள்ள ரவுடி கொலையில் தொடர்புடைய பவர் குப்பம் பகுதியைச் சேர்ந்த ரவுடிகள் விமல், பூபாலன் உள்ளிட்ட ஐந்து பேருக்கு போலீசார் வலை வீசி தேடி வருகின்றனர்.

முன்விரோதத்தால்ரவுடிகள் இடையே ஏற்பட்ட மோதலில் 26 வயது ரவுடி வெங்கட்ராமன் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் காசிமேட்டில் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

# நாட்டின் எதிர்காலம் தொழிலாளர்களின் எதிர்காலத்தில் உள்ளது : ராகுல் காந்தி



ராஞ்சி : பிப். 6–
நாட்டின் எதிர்காலம் தொழிலாளர்களின் எதிர்காலத்தில் உள்ளது என ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி இந்திய ஒற்றுமை யாத்திரை மேற்கொண்டு வருகிறார். ஜார்க்கண்டில் கடந்த சனிக்கிழமை நுழைந்த ராகுல் காந்தி 2வது நாளாக அங்கு பயணம் செய்தார். இந்நிலையில் கோதர் காளி பஸ்தியில் நிலக்கரி தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை ராகுல் காந்தி சந்தித்தார். இது குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர்; அவர்களுக்கு நிரந்தர வேலையோ, வருமானத்துக்கு உத்தரவாதமோ இல்லை, மத்திய அரசின் எந்தத் திட்டத்தின் பலனும் கிடைப்பதில்லை.

அவர்களின் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் மோடி அரசு ஆதரவற்ற இருளில் தள்ளிவிட்டது என்று அவர்களின் முகங்களில் எழுதப்பட்டுள்ளது. அவர்களின் கண்கள் நிலக்கரி வியாபாரிகளிடம் கேட்கின்றன, உங்கள் பங்கில் பளபளப்பும் எங்கள் பங்கில் விதியும் எவ்வளவு காலம் இருக்கும்? இந்த குடும்பங்களுக்கு அவர்களின் கல்வி, சம்பாதிப்பு மற்றும் மருத்துவத்திற்கான உறுதியான ஏற்பாடுகளுடன் பாதுகாப்பான நாளை வழங்குவதன் மூலம் மட்டுமே இந்தியாவைக் கட்டியெழுப்பிய இந்தத் தொழிலாளர்களுக்கு நீதி கிடைக்கும்.

இந்த நீதியை காங்கிரஸ் மட்டுமே அவர்களுக்கு வழங்கும், ஏனென்றால் நாட்டின் எதிர்காலம் தொழிலாளர்களின் எதிர்காலத்தில் உள்ளது என்று நாங்கள் நம்புகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் ரூ.5 லட்சம் மதிப்பில் சீரமைக்கப்பட்ட பள்ளி கட்டிடம் திறப்பு விழா




ஊத்துக்கோட்டை, பிப். 6–
திருவள்ளூர் மாவட்டம்,எல்லாபுரம் ஒன்றியம், அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் ஓட்டு கட்டிடத்தில் பள்ளிக்கூடம் இயங்கி வந்தது.

இந்நிலையில், இக்கட்டிடத்தை தளம் போட்டு சீரமைத்து கட்டி முடிக்கப்பட்டது.எல்லாபுரம் ஊராட்சி ஒன்றிய பொது நிதி 2021-22-ம் ஆண்டு நிதி தொகை ரூ.5 லட்சம் மதிப்பில் இக்கட்டிடம் சீரமைக்கப்பட்டது. இதனை திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு,ஊராட்சி மன்ற தலைவர் கே.சுதாகர் தலைமை தாங்கினார். ஒன்றிய குழு உறுப்பினர் சியாமளாஸ்ரீதர், ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் என்.ரவி மற்றும் வார்டு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர்.

இதில், சிறப்பு அழைப்பாளராக எல்லாபுரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் ஆ.சத்தியவேலு கலந்துகொண்டு பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்து மாணவர்களுக்கும்,பொது மக்களுக்கும் இனிப்பு வழங்கினார்.முன்னதாக பள்ளி வளாகத்தில் உள்ள அம்பேத்காரின் திருஉருவச் சிலைக்கு நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில், பள்ளியின் தலைமை ஆசிரியர் கணேஷ்வரி, ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் தினேஷ், கிளை செயலாளர் சுரேஷ், ஊராட்சி செயலர் சந்திரபாபு மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசுத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு நகராட்சி, மாநகராட்சி தூய்மை ஆய்வாளர், தூய்மை அலுவலர்கள் சங்க மாநில பொதுக்குழு கூட்டம்




சென்னை , பிப்.6–
தமிழ்நாடு நகராட்சி, மாநகராட்சிதுப்புரவுஆய்வாளர், துப்புரவு அலுவலர்கள் சங்க மாநில பொதுக்குழு கூட்டம் திண்டுக்கல் மாநகரில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. தமிழகம் முழுவதும் உள்ள நகராட்சி, மாநகராட்சிகளில் இருந்து துப்புரவு ஆய்வாளர்கள், துப்புரவு அலுவலர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.


இக்கூட்டத்திற்கு மாநில தலைவர் திருவேற்காடு நகராட்சி துப்புரவு அலுவலர் ஆல்பர்ட் அருள் ராஜ் தலைமை தாங்கினார். மாநில பொது செயலாளர் செந்தில் ராம்குமார் மற்றும் இளங்கோ முன்னிலை வகித்தனர். வெங்கடாசலம், ரங்கராஜ், திருப்பதி, ராஜரத்தினம், சுரேஷ், செந்தில்குமார், குருசாமி, ரமேஷ், நல்லுசாமி, மணிவண்ணன் போன்றோர் கலந்து கொண்டு பேசினர். இறுதியாக முன்னாள் தலைவர் கோவிந்தராஜ் நன்றி கூறினார்.

இக்கூட்டம் குறித்து மாநில தலைவர் ஆல்பர்ட் அருள் ராஜ் கூறியதாவது, தற்போது அறிவிக்க பட்டு உள்ள காலிப்பணியிடங்க ளுக்கான நேரடியான நியமனம் என்பதை இச்சங்கம் ஆதரிக்கிறது. முறையான தேர்வு மூலம், வெளிப்படையான நியமனம் என்பது அனைவரும் ஏற்று கொள்ளகூடியதே. அதேசமயம் துப்புரவு ஆய்வாளர்களின் கல்வி தகுதி என்பதில் உள்ள பிஎஸ்சி கெமிஸ்ட்ரி உடன் விலங்கியல் என்பதற்க்கு பதிலாக பிஎஸ்சி கெமிஸ்ட்ரி உடன் கணிதம் என்ற பழைய தகுதியின் அடிப்படையில் விண்ணப்பிக்க அனுமதிக்க வேண்டும். ஏன் எனில் பழைய தகுதியின் அடிப்படையில் தான் ஏறக்குறைய 700 மாணவர்கள் படித்து முடித்து தயார் நிலையில் உள்ளனர். எனவே சங்கத்தின் சார்பிலான இக்கோரிக்கையினை நகராட்சி நிர்வாகம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

நிறைவேற்றபட்ட இதர தீர்மானங்கள்:1) சமவேலை,சம ஊதியம் என்பதை கருத்தில் கொண்டு, நகராட்சி துப்புரவு அலுவலர் மற்றும் மாநகராட்சி துப்புரவு அலுவலர்களுக்கு இடையே உள்ள ஊதிய முரண்பாட்டினை களைந்திட விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும். 2) துப்புரவு ஆய்வாளர்களின் பதவி உயர்வு துப்புரவு அலுவலர் என்பதோடு நின்று விடாமல் மண்டல அளவில்,மாநில அளவில் பதவி உயர்வு அளிக்க வேண்டும்3) kPI என்ற புதிய முறையில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் தற்போது செயல் படுத்த பட்டு வர படுகிறது. நல்ல திட்டம் என்பதில் மாற்று கருத்து இல்லை. எனினும் பாதகமான அம்சங்களும்,செயல் படுத்த முடியாத விசயங்களும் இதில் உள்ளன. எனவே KPI முறையினை மீண்டும் மறு பரிசீலனை செய்து பாதகமான அம்சங்களை களைய முன் வர வேண்டும். 4) நகராட்சி,மாநகராட்சிகளில் உள்ள ஹெல்த் ஆபீசர் எனப்படும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை சார்ந்த மருத்துவர்களை நியமனம் செய்வதை தடுத்திட வேண்டும். ஏற்கனவே அதே பணிகளை செய்திட துப்புரவு அலுவலர் பணியிடம் இருக்கும்போது, நகர்நல அலுவலர் என்ற பணியிடம் தேவை இல்லை.5) துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு அலுவலர்களின் ஊதியம் உயர்த்த பட வேண்டும்6) திரவ கழிவு மேலாண்மை திட்டத்தில் துப்புரவு ஆய்வாளர்,மற்றும் அலுவலர்களுக்கு என்று எந்த பணியும் ஒதுக்கப்பட வில்லை .பொறியாளர்களுக்கு தான் பணிகள் ஒதுக்கபட்டு உள்ளன. ஆனால் நடைமுறையில் துப்புரவு ஆய்வாளர்களுக்கே பணிகள் ஒதுக்க பட்டு உள்ளன.

இதனை நகராட்சிநிர்வாகம் முறை படுத்த வேண்டும். அதே போல திட கழிவு மேலாண்மை திட்டத்திலும், பொறியாளர்கள், தான் மேற்கொள்ள வேண்டும் என்று உள்ளது. ஆனால் நடைமுறையில் அப்படி இல்லாததால் , நடைமுறை சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே வருங்காலங்களில் துப்புரவு பணி பொது சுகாதார பிரிவும், சேகரம் செய்த கழிவுகளை செயலாக்கம் செய்வது போன்ற பணிகளை பொறியியல் பிரிவும் மேற்கொள்ள வழிவகை செய்ய வேண்டும்7) துப்புரவு ஆய்வாளர் ,துப்புரவு அலுவலர் என்கின்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டு நகராட்சி சுகாதார அலுவலர், நகராட்சி சுகாதார அலுவலர் என்று பெயர் மாற்றம் செய்திட வேண்டும். துப்புரவு அலுவலர்களுக்கு ஆய்வு பணி மேற்கொள்ள ஜீப் வாகனம் வழங்க வேண்டும்.8) 100% திடக்கழிவுகளை பிரித்தெடுப்பது, மக்கள் முழு ஒத்துழைப்பு தரும் பட்சத்தில் தான் சாத்தியம் என்பதால், அந்த நிலை உருவாகும் முன்பே ,பிரிக்க முடியாத குப்பைகளை, இன்னர்ட்டுகளை சேர்ப்பிக்கும் இடங்களை மூடி விட முயற்சி எடுப்பது நடைமுறை சிக்கல்கள் உருவாக்கும் என்பதால், யதார்த்த நிலையினை புரிந்து கொண்டு, சில வருடங்களுக்கு இந்த யோசனையினை கைவிட வேண்டும்9) தேர்தல் பணியில் இருந்து துப்புரவு ஆய்வாளர் மற்றும் அலுவலர்களுக்கு விலக்கு அளிக்க தேர்தல் ஆணையத்தில் வலியுறுத்திட வேண்டும். ஊரக பகுதிகளில் பணி புரியும் சுகாதார ஆய்வாளர்களுக்கு தேர்தல் பணி ஒதுக்க படுவதில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.10) துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கான வாகன படியினை உயர்த்திட வேண்டும். பணிஇட மாறுதலில் கவுன்சிலிங் முறையினை பின்பற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.நகராட்சி நிர்வாகத்துறையும், தமிழ்நாடு அரசாங்கமும் மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை பரிசீலித்து நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சங்கத்தின் மாநில பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கேட்டு கொண்டனர்

# சென்னை காசிமேட்டில் இரட்டை இன்ஜின் பொருத்திய பைபர் படகுகள் உரிமையாளர்கள் வேலை நிறுத்தம்



சென்னை, பிப்,6
சென்னை காசிமேடு பூண்டி தங்கம்மாள் தெருவைச் சேர்ந்த மீனவர் மனோகர் என்பவரும் சொந்தமான இரட்டை இன்ஜின் பொருத்திய பைபர் படகில் கடந்த மாதம் 29 ஆம் தேதி அன்று அதிகாலை 6 மணிக்கு காசிமேடு மீன்பிடி துறைமுகத்திலிருந்து 6 மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர்.

கடந்த 1 தேதி அன்று வெள்ளிக்கிழமை பழவேற்காடு அருகே ஆழ்கடலில் கடலில் மீன் பிடித்துக் கொண்டு இருந்த போது கடல் நீர் பைபர் படகில் உட்புகுந்து ஆழ்கடலில் மூழ்கியது 6 மீனவர்களை அருகில் மீன்பிடித் கொண்டு இருந்த மீனவர்கள் காப்பாற்றினார்.

20 லட்ச ரூபாய் மதிப்புள்ள பைபர் படகு கடலில் மூழ்கியதால் மீனவர் குடும்பத்தின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது. 1983 ஆம் ஆண்டு அரசாணைப்படி அப்போதிருந்த கட்டுமரம் பாதிப்பு ஏற்பட்டால் 75 ஆயிரம் ரூபாய் மட்டுமே இழப்பீடு தொகை வழங்கப்பட்டு வருவதாகவும் தற்பொழுது டீசல்விலைஉயர்வுவிலைவாசி உயர்வை கருத்தில் கொண்டு இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி அரசாணை வெளியிட வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்.

மேலும் தற்போது பாதிக்கப்பட்ட மீனவர் மனோகரன் குடும்பத்திற்கு தமிழ்நாடு மீன்வளத்துறை சார்பில் 5 லட்சம் ரூபாயும், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாயும் மொத்தம் 10 லட்ச ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்.

# புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில் 36வது ஆண்டுவிழா கோலாகலம்



புதுக்கோட்டை , பிப். 6-

புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில், 36வது ஆண்டுவிழா கோலாகலமாக கொண்டாப்பட்டது. இவ்விழாவில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி, கிருஷ்ணன் ராமசாமி முதன்மை விருந்தினராகவும், தமிழ்நாடு கருவூலங்கள் மற்றும் கணக்குகள் ஆணையர் விஜயேந்திரபாண்டியன் கௌரவவிருந்தினராகவும், சட்ட நிபுணர் மூத்தநிலை ஆலோசகர் வருமான வரித்துறை சென்னை உயர்நீதி மன்றம் ராமசுவாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

இவ்விழாவானது இறைவழிபாட்டுப்பாடல் ஒலித்தபின், மௌண்ட்சீயோன் பள்ளிகளின் துணைத்தலைவர் ஏஞ்சலின்ஜோனத்தன் இறைவழிபாட்டுடனும்,தமிழ்த்தாய்வாழ்த்துடனும் விழா இனிதே துவங்கியது. மௌண்ட்சீயோன் பள்ளிகளின் தலைவர் டாக்டர். ஜோனத்தன்ஜெயபரதன் சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்துவைத்துப்பின்னர், அவர்களுக்கு பொன்னாடைப் போர்த்தி, நினைவுப்பரிசினை வழங்கி கௌரவப்படுத்தினார். பின்னர் பள்ளியின் தலைவர் டாக்டர். ஜோனத்தன் ஜெயபரதன் ஆண்டறிக்கையை வாசித்தார்.

நிகழ்ச்சியில் கௌரவவிருந்தினர் விஜயேந்திரபாண்டியன் பேசுகையில், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஒரு வரப்பிரசாதம் தான் மௌண்ட்சீயோன் மெட்ரிக்பள்ளி என்றும், மனிதாபிமானம் என்ற ஒன்றே மனித வாழ்க்கையை நகர்த்திசெல்கிறது என்றும், ஒருமனிதன் 10000 மணிநேரம் ஒருசெயலை செய்யும்போது அச்செயலில் வெற்றியிடும் என்றுக்கூறினார். அவரைத்தொடர்ந்து சிறப்புவிருந்தினர் ராமசுவாமி பேசுகையில் பெற்றோர்கள் பிள்ளைகளை சுயமாக சிந்தித்து முடிவு எடுக்க சுதந்திரம் அளியுங்கள், அவர்களை கட்டுப்பாட்டுக்குள் வைக்கநினைக்காதீர்கள். ஆசிரியர்கள் நினைத்தால் மாணவர்களை தலைசிறந்தவர்களாக உருவாக்கமுடியும். ஆசிரியர்களே மிகப்பெரிய சக்திவாய்ந்தவர்கள் என்றார் மேலும் நேரம் தவறாமையின் தேவையினைக் கூறினார்.

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி பேசுகையில் முயற்சி திருவினையாக்கும் என்றும்,கிராமப்புறத்தில் இருக்கும் மாணவர்களும் கல்வியில் மிகப்பெரிய சாதனைப்புரியலாம் என்றும் கூறினார். விடா முயற்சியினால் வெற்றி பெற்றவர்கள் பற்றிய ஊக்கப்படுத்தும் நிகழ்வினைப்பற்றிக் கூறினார். பிள்ளைகளை கற்பித்தலிலும் , நற்பண்புகளிலும் ஊக்கப்படுத்த வேண்டும் எனக்கூறினார். மாணவர்கள் ஆசிரியர்களின் சொல்கேட்டு நடந்தால் வெற்றி பெறலாம் எனக்கூறினார். கல்வி மற்றும் விளையாட்டில் மாநில, மாவட்ட அளவிலும், பள்ளி அளவிலும் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கு சான்றிதழ்களும், கேடயமும் வழங்கப்பட்டது. பின்னர் வண்ணமயமான கலைநிகழ்ச்சிகள் துவங்கின. எல்கேஜி முதல் 9ம்வகுப்புவரை பயிலும் மாணவ, மாணவிகள் அனைவரும் இசையோடு கூடியபாடல் பாடினார்கள். இந்தியாவின் பல்வேறு பாரம்பரிய நடனங்களையும், மேற்கத்திய நடனங்களையும் ஆடி, தங்கள் திறமைகளை அரங்கேற்றினார்கள்.

பள்ளியின் கல்வி முதல்வர் குமரேஷ் நன்றியுரைவழங்கினார். பள்ளியின் நிர்வாக முதல்வர் கிருபாஜெபராஜ் ஆண்டுவிழா நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். நிகழ்ச்சியானது நாட்டுப்பண்ணுடன் நிறைவடைந்தது.



▶ பாரதிய ஜனதா கட்சியின் கந்தர்வக்கோட்டை ஒன்றிய தலைவர் டி.ஆர்.தவமணி மகள் ஹிமானி முதலாவது பிறந்தநாள் விழாவில், பாஜக தேசிய சிறுபான்மை அணிச் செயலாளர் வேலூர் இப்ராஹிம் கலந்துகொண்டார். இந்த விழாவில் பாஜக மாவட்டத் தலைவர் ஏ,விஜயகுமார், மாநில விளையாட்டு பிரிவு துணைத் தலைவர் என். ராமச்சந்திரன், மாவட்ட பொதுச்செயலாளர் ஏவிசி கணேசன், மாவட்ட செயலாளர் கங்காதரன் உள்ளிட்ட பாஜக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டார். வேலூர் இப்ராஹிம் வருகையையொட்டி பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



▶ மதுரை தெப்பக்குளம் அருணாச்சலம் கமலாம்மாள் மண்டபத்தில் அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு குழு ஒருங்கிணைந்த மாவட்ட ஆலோசனை கூட்டம் மாநகர் மாவட்ட அதிமுக செயலாளர் கோபாலகிருஷ்ணன் தலைமையில், உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அய்யப்பன் முன்னிலையிலும், நடைபெற்றது. வடக்கு மாவட்டச் செயலாளர் முருகேசன் வரவேற்புரையாற்றினார். அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் வைத்திலிங்கம் வாழ்த்துரையும், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் விழா பேருரையாற்றினார். வீரவாளும், கையில் வேலும் தொண்டர்களால் வழங்கப்பட்டது. உடன் அமைப்புச் செயலாளர் ராமமூர்த்தி, முன்னாள் அமைச்சர் கு.ப.கிருஷ்ணன், துணை ஒருங்கிணைப்பாளர் மனோஜ் பாண்டியன், பகுதி செயலாளர் முத்து இருளாண்டி மற்றும் அதிமுக தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



▶ தென்காசி மாவட்டம், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க தென்காசி தெற்கு மாவட்டம், பங்களா சுரண்டை பேரன்புரூக் மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா இரு சக்கர மிதிவண்டியினை தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வே.ஜெயபாலன் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார், சுரண்டை நகராட்சி சேர்மன் வள்ளிமுருகன் கழக நிர்வாகிகள் மற்றும் காங்கிரஸ் தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அரியலூரில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



அரியலூர் : பிப். 6-

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், "மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்" மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதியோர் உதவித் தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, தொழில்கடன், பசுமை வீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 362 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித்தலைவரால் பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

மாவட்ட ஆட்சியரின்கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) பவானி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) இளங்கோவன் மற்றும் அனைத்துதுறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# சங்கரன்கோவிலில் கூட்டுறவு தொமுச பணியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி



சங்கரன்கோவில் : பிப். 6-

சங்கரன்கோவில் வட்டார கூட்டுறவு தொமுச நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு புதிய உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்ச்சி சங்கரன்கோவிலில் வடக்கு மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

வடக்குமாவட்டச்செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு சங்கரன்கோவில் வட்டார கூட்டுறவு தொமுச நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு புதிய உறுப்பினர் அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் அமைச்சர் தங்கவேலு, யூஎஸ்டி சீனிவாசன், சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ், மாவட்ட தொமுச கவுன்சில் செயலாளர் மைக்கேல்நெல்சன், மாவட்ட தலைவர் ஜெயராம், மாவட்ட பொருளாளர் மகாராஜன், கூட்டுறவுசங்கதொமுசமாவட்டத் தலைவர் முருகன், மாவட்டச் செயலாளர் சரவணன், மாவட்ட பொருளாளர் பிச்சையா, துணை தலைவர் சண்முகவேல், துணை செயலாளர் பாண்டி, போக்குவரத்து தொமுச சங்கரன்கோவில் பணிமனை நிர்வாகிகள் சங்கர்ராஜ், குருசாமிராஜ், மின்வாரிய தொமுச நிர்வாகிகள் சரவணமுருகையா, சத்யராஜ் மற்றும் ஆறுமுகவேல், மாரியப்பன் மற்றும் மாவட்ட, வட்டார நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டம் செந்துறை அருகே ரூ. 45.06 கோடி மதிப்பீட்டில்

# நான்கு வழித்தடமாக சாலை மேம்பாடு செய்யும் பணி அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்



அரியலூர் : பிப். 6-

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், மருவத்தூர் கிராமத்தில், நெடுஞ்சாலைத் துறையின் சார்பில், முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.45.06 கோடி மதிப்பீட்டில் மருவத்தூர் முதல் பொன்பரப்பி வரை 6 கி.மீ நீளத்திற்கு இருவழிச் சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி, மேம்பாடு செய்யும் பணியினை, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரிஸ்வர்ணா முன்னிலையில் நடைபெற்றது. இச்சாலை மேம்படுத்துவதன் மூலம் செந்துறை, மருவத்தூர், பொன்பரப்பி, மருதூர், வாரியங்காவல், இலையூர், செங்குந்தபுரம் மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய பகுதிகளில்உள்ளபொதுமக்கள் பயன்பெறுவார்கள். எனவே, இச்சாலை பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்துசாலையின்இருபுறமும் தற்போது உள்ளது போல் பசுமையான மரங்களை நட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் உத்தண்டி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், உதவி கோட்டப் பொறியாளர் கருணாநிதி, உதவிபொறியாளர் விக்னேஷ்ராஜ், செந்துறை வட்டாட்சியர் வேலுமணி, வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபாகரன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### சூமோட்டோ வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகளை

# ஐகோர்ட் தலைமை நீதிபதி முடிவு செய்ய வேண்டும் : உச்ச நீதிமன்றம்



புதுடெல்லி, பிப். 6-

'தாமாக முன்வந்து பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியின் ஒப்புதலைப் பெற வேண்டும். இந்த வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகளை தலைமை நீதிபதிதான் தீர்மானிக்க வேண்டும்' என்று அமைச்சர்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கில் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2006-2011 வரையிலான திமுக ஆட்சிக் காலத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சராக தங்கம் தென்னரசுவும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமசந்திரனும் பதவி வகித்தனர். இந்தக் காலக்கட்டத்தில், இருவரும் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக இரண்டு தனித்தனி வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அவரது மனைவி மீது வருமானத்துக்கு அதிகமாக ரூ.76.40 லட்சம் சொத்து சேர்த்ததாக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது. அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமசந்திரன், அவரது மனைவி உட்பட மூவர் மீது ரூ.44.56 லட்சம் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்குகளின் விசாரணை ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்தன. இந்த வழக்கில் இருந்து தங்களை விடுவிக்கக் கோரி அமைச்சர்கள் தங்கம் தென்னரசு மற்றும் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் ஆகியோர் ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், வழக்கில் இருந்து அமைச்சர்கள் தங்கம் தென்னரசு மற்றும் அவரது மனைவி, கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமசந்திரன் மற்றும் அவரது மனைவி உட்பட மூவரையும் விடுவித்து உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவுகளை எதிர்த்து லஞ்ச ஒழிப்புத் துறை மேல்முறையீடு செய்யத நிலையில், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் தாமாக முன்வந்து சீராய்வு மனுக்களை விசாரணைக்கு எடுத்தார். இதனை எதிர்த்து அமைச்சர்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் தங்கம் தென்னரசு ஆகியோர் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதில், கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவில், 'இந்த வழக்கு உயர் நீதிமன்ற விதிகளுக்கு எதிராக, தலைமை நீதிபதியின் ஒப்புதல் இல்லாமல் தனி நீதிபதி தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்துள்ளார். எனவே, தனி நீதிபதியின் விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும்' எனக் கூறியிருந்தார். இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், இது தொடர்பாக விரிவான அறிக்கை தாக்கல் செய்ய உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளருக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு உச்ச நீதிமன்ற நீதிபதி ரிஷிகேஷ் ராய் தலைமையிலான அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளர் தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யபப்ட்டது. அதில், தனி நீதிபதி தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துள்ள இந்த வழக்கை விசாரிக்க உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியின் ஒப்புதலைப் பெறவில்லை. ஆனால், தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துள்ள வழக்கின் கோப்புகளை தலைமை நீதிபதி பார்த்துள்ளதாக, அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்துஅமைச்சர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள், "உயர் நீதிமன்ற பதிவாளரின் அறிக்கையில் தலைமை நீதிபதியின் ஒப்புதலைப் பெறவில்லை என கூறப்பட்டுள்ளதால், தனி நீதிபதியின் விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும்" என வாதிட்டனர். அப்போது பதிவாளர் தரப்பில், "விசாரணைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. விதிகளை தவறாக புரிந்துகொண்டு இந்த வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. எனவே, தனி நீதிபதியின் விசாரணைக்கு தடை விதிக்கக் கூடாது. ஏற்கெனவே, இதே போன்ற வழக்கில் முன்னாள் அமைச்சர் பொன்முடி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது" என வாதிடப்பட்டது.

அனைத்து தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், "தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுக்கும் வழக்குகள் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஒரு முடிவை எடுப்பார் என்று நம்புகிறோம். இந்த வழக்குகளை தலைமை நீதிபதியே விசாரிக்கலாம் அல்லது வேறு அமர்வுகளுக்கு மாற்றி உத்தரவிடலாம்.

அதே நேரம் அமைச்சர்களுக்கு எதிராக தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுக்கும் வழக்குகளில் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியின் ஒப்புதலை பெற வேண்டும். அந்த வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகளை தலைமை நீதிபதிதான் முடிவு செய்ய வேண்டும். மேலும், உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள இந்த மேல்முறையீட்டு வழக்கின் உத்தரவு, அமைச்சர்களுக்கு எதிராக தாமாக முன்வந்து பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கை எந்த அமர்வில் விசாரித்தாலும், எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது" என்று நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

### புதுக்கோட்டை பேக்கரி மஹராஜ் நிறுவனத்தின்

# தானியங்கி உணவுப்பொருள் வழங்கும் மெஷின் மருத்துவக்கல்லூரியில் வைக்க சமூக ஆர்வலர்களின் கோரிக்கை

புதுக்கோட்டை , பிப். 6-

புதுக்கோட்டை பேக்கரி மஹராஜ் நிறுவனத்தின் தானியங்கிஉணவுப்பொருள் வழங்கும் மெஷின் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் தொடங்க வேண்டும் என்ற கோரிக்கை சமூக ஆர்வலர்களால் வைக்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்ட மக்களின் முழு நம்பிக்கையை பெற்ற நிறுவனமான அறமனச் செம்மல் தெய்வத்திரு சீனு சின்னப்பா அவர்களால் தொடங்கப்பட்ட பேக்கரி மஹராஜ் நிறுவனத்தின் அனைத்து தயாரிப்புகளும் சாமானிய மக்களை எந்த நேரத்திலும் எளிதில் கிடைத்திடும் வகையில் ரூபாய் 5 லட்சம் மதிப்பிலான தானியங்கி இயந்திரம் ஒன்று கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக பேக்கரி மஹராஜ் நிறுவனத்தின் தலைமை அலுவலகமான மார்த்தாண்டபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

தங்களுக்கு உணவு கிடைக்காத சிக்கலான நேரத்தில் அந்த மிஷினை பொதுமக்களில் பலர் பயன்படுத்திக்கொண்டு தங்களின் தேவையை பூர்த்திசெய்துக்கொண்டு வருகின்றனர். மெஷின் வைத்த ஆரம்பத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு முறை மட்டுமே டாப் ஆப் செய்த நிறுவனம் தற்பொழுது இரவு நேரங்களில் இரண்டு, மூன்று முறை வரை டாப் ஆப் செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அந்த அளவிற்கு மெஷின் முக்கியத்துவம் பயன்பாடு பொதுமக்களிடையே வரவேற்பு பெற்றுள்ளது. இருப்பினும் இந்த மெஷின் பொதுமக்கள் அதிகம் சங்கமிக்க கூடிய இடங்களில் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை பொதுமக்கள் சமீபகாலமாக சமூக ஆர்வலர்களால் வைக்கப்பட்டு வருகிறது அது நம்முடைய கள ஆய்விலும் தெரிய வந்துள்ளது.

அந்தவகையில்சாமானிய ஏழை எளியோர் அதிகம் கூட கூடிய புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இத்தகைய தானியங்கி இயந்திரம் அமைக்கப்பட்டால் பொதுமக்களுக்கும் ஏழை எளியோருக்கும் குறைந்த விலையில் தரமான உணவுப் பொருட்களான பிரட் பாக்கெட், பன்,ரஸ்க் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் நோயாளிகளுக்கு கிடைக்க ஏதுவாக அமையும் பொது மக்களின் எதிர்பார்ப்பு குறித்து புதுகை வரலாறு சார்பில் பேக்கரி மஹராஜ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் அருண்ராஜ் சின்னப்பா அவர்களை சந்தித்து பொதுமக்களின் எதிர்பார்ப்பு குறித்து தெரிவித்த போது அவர் கூறுகையில்;



பொதுமக்கள் தங்களையும் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் பொது மக்களின் தேவையை பூர்த்தி செய்ய தாங்கள் தயாராக இருப்பதாகவும் அதே வேளையில் மாவட்ட நிர்வாகம் விருப்பப்பட்டு எங்களுக்கு அனுமதி அளித்தால் ரூபாய் 5 லட்ச ரூபாய் மதிப்பிலான தானியங்கி இயந்திரத்தை எங்களின் சொந்த செலவில் அங்கு அமைத்து நோயாளிகளுக்கும் பொதுமக்களுக்கும் அத்தியாவசிய தேவையான பொருட்களான பிரட், பன், ரஸ்க் பாக்கெட்களை வைத்து பராமரிக்க தாங்கள் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.


மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் தனியாரால் நடத்தப்பட்டு வரும் கேண்டின்களில் விற்கப்படும் பொருள்களின் விலை கடைவீதிகளில் உள்ள விலையை விட கூடுதல் விலை வைத்து விற்கப்படுவதால் நோயாளிகள் மட்டுமின்றி அவர்களது உறவினர்களும் பசியும் பட்டினியுமாகவே பாதி நாட்களைக் கடக்க வேண்டிய சூழலில் உள்ளனர். இது மருத்துவக் கல்லூரி நிர்வாகத்திற்கும் நன்கு தெரியும் மக்களின் நலன் கருதி சமூக ஆர்வலர்கள் கோரிக்கையை கருத்தில் கொண்டு குறைந்த விலையில் உடனுக்குடன் தயாரிக்கப்படும் பேக்கரி மஹராஜ் நிறுவனத்தின் தயாரிப்புகளையோ அல்லது மாவட்ட நிர்வாகமே ஒரு தானியங்கி இயந்திரத்தை மருத்துவகல்லூரி மருத்துவமனைக்காக ஏற்பாடு செய்து அதில் தரமான உணவுபொருட்களை பொதுமக்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள், நோயாளிகள் அனைவரும் பயன்பெறும் வகையில் ஏற்படுத்தித் தர வேண்டும் என்பது புதுகை வரலாறு எதிர்பார்ப்பு.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

## கூடைப்பந்து விளையாட்டில் மிகவும் புகழ் பெற்ற
## மைக்கேல் ஜோர்டனின் 6 ஜோடி ஷூக்கள் ரூ.66 கோடி ஏலம்

**அமெரிக்கா : பிப். 6,**
**அமெரிக்காவில் மிகவும் பிரபலமான விளையாட்டு, "பாஸ்கெட் பால்" எனும் கூடைப்பந்து. கூடைப்பந்து விளையாட்டில் மிகவும் புகழ் பெற்ற அமெரிக்க சாதனையாளர், மைக்கேல் ஜோர்டன்.**




1980களிலும், 90களிலும் கூடைப்பந்து விளையாட்டு பிரபலம் அடைய மைக்கேல் ஜோர்டன் ஒரு முக்கிய காரணம். 1984 தொடங்கி 2003 வரை ஆண்டுதோறும் நடைபெறும் என்பிஏ ஃபைனல்ஸ் எனப்படும் அந்நாட்டின் "தேசிய கூடைப்பந்து சங்கம்" நடத்தும் போட்டித் தொடரில் 6 முறை "சிகாகோ புல்ஸ்" அணிக்காக சாம்பியன்ஷிப் வென்றார் ஜோர்டன்.

மேலும், ஒலிம்பிக் பந்தயங்களிலும் 2 முறை ஜோர்டன் தங்க பதக்கம் வென்றார். 2003ல் கூடைப்பந்து விளையாட்டுகளில் இருந்து ஓய்வு பெற்ற ஜோர்டனுக்கு தற்போது 60 வயது ஆகிறது.

இந்நிலையில், மைக்கேல் ஜோர்டன் பயன்படுத்திய "ஸ்னீக்கர்ஸ்" எனப்படும் விளையாட்டுக்கான காலணிகள் ஏலத்தில் விற்பனைக்கு வந்தன. பருமனான கேன்வாஸ் துணியால் தயாரிக்கப்பட்டு ரப்பரில் செய்யப்பட்ட ஸோல்கள் அமைந்த ஜோர்டன் அணிந்த ஸ்னீக்கர்களின் ஏலம் பெரிதும் எதிர்பார்ப்பை உண்டாக்கியது.

பிரபல சோத்பி'ஸ் ஏல நிறுவனம் நடத்திய இந்த ஏலத்தில் ஜோர்டன் பயன்படுத்திய 6 ஜோடி ஸ்னீக்கர்கள், ரூ.66,39,96,400.00 ($8 மில்லியன்) தொகைக்கு ஏலம் போனது. இந்த ஷூக்களை, ஜோர்டன், 1991, 1992, 1993, 1996, 1997 மற்றும் 1998 ஆண்டுகளில் சாம்பியன்ஷிப் போட்டிகளில் அணிந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இவற்றை ஏலத்தில் வாங்கியவரின் விவரங்களை ஏல நிறுவனம் தற்போது வரை வழங்கவில்லை. ஜோர்டன் அணிந்திருந்த ஜெர்ஸி, 2022ல், சுமார் 10 மில்லியன் அமெரிக்க டாலருக்கு விலை போனது குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் இந்தியா 106 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி

**விசாகப்பட்டினம் : பிப். 6,**
**இங்கிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் இந்தியா 106 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றுள்ளது. இதன்மூலம் 5 போட்டிகள் டெஸ்ட் தொடர் 1 - 1 என்று சமன் ஆகியுள்ளது.**



இங்கிலாந்து கிரிக்கெட் அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில், 2-வது டெஸ்ட் போட்டி விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது. முதலில் விளையாடிய இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 396 ரன்கள் குவித்தது. பின்னர் முதல் இன்னிங்ஸை விளையாடிய இங்கிலாந்து அணி 253 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இங்கிலாந்து அணி, இந்திய அணியை விட 143 ரன்கள் பின்தங்கியது. பும்ரா மொத்தமாக ஆறு விக்கெட்களை கைப்பற்றினார்.

இதன்பின் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணிக்கு ரோஹித் சர்மா - ஜெய்ஸ்வால் இணை சுமாரான துவக்கமே கொடுத்தது. 13 ரன்களில் ரோஹித் விக்கெட்டாக, ஜெய்ஸ்வால் 17 ரன்கள் மட்டுமே எடுத்தார். இதனால் 30 ரன்களுக்குள் இந்திய அணி இரண்டு விக்கெட்களை இழந்தது. இதன்பின் வந்தவர்களில் ஷுப்மன் கில் சிறப்பாக விளையாடி சதம் அடித்து அசத்தினார். அவருக்கு அக்சர் படேல் உறுதுணையாக இருந்தார். கடந்த சில போட்டிகளாக சிறப்பாக விளையாடாத ஷுப்மன் கில் இந்த இன்னிங்ஸில் இங்கிலாந்தின் பந்துவீச்சை சிறப்பாக சமாளித்து அதிரடி சதம் விளாசினார். 147 பந்துகளில் 11 பவுண்டரி, 2 சிக்ஸர்கள் என 104 ரன்கள் எடுத்து விக்கெட்டானர். அக்சர் படேல் 45 ரன்கள் எடுத்து அவுட்டானார்.

மற்றவர்களில் ஸ்ரேயஸ் ஐயர் மற்றும் அஸ்வின் தலா 29 ரன்கள் எடுத்தனர். இதனால் இரண்டாவது இன்னிங்ஸில் 255 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இதன்மூலம் இங்கிலாந்து அணிக்கு 399 ரன்களை இலக்காக நிர்ணயம் செய்தது இந்திய அணி. இங்கிலாந்து அணி தரப்பில் டாம் ஹார்ட்லி 4 விக்கெட், ரெஹான் அகமது 3 விக்கெட், ஆண்டர்சன் 2 விக்கெட் வீழ்த்தினர்.

டெஸ்டின் 3-ம் நாள் ஆட்டம் முடிவில், 2-வது இன்னிங்ஸில் 67 ரன்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்தது இங்கிலாந்து அணி. 332 ரன்கள் பின்தங்கிய நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தை நேற்று தொடர்ந்தது. நிதானமாக தொடங்கினாலும், இந்திய வீரர் அக்சர் படேல் இங்கிலாந்தின் பேட்டிங் வரிசையை சீர்குலைத்து சரிவை தொடங்கி வைத்தார். நைட் வாட்ச்மேனாக இறக்கப்பட்ட ரெஹான் அகமதுவை (23 ரன்கள்) வீழ்த்தினார் அக்சர் படேல்.

இதன்பின் அஸ்வினும், பும்ராவும் இணைந்து இங்கிலாந்து பேட்டர்களை திணறச் செய்தனர். அபாயகரமான ஆலி போப், ஜோ ரூட் என இங்கிலாந்தின் தூண்களை சுலபமாக காலி செய்தார் அஸ்வின். தனது அடுத்தடுத்த ஓவர்களில் இந்த இரண்டு விக்கெட்களையும் வீழ்த்தி அஸ்வின் ஆட்டத்தில் திருப்புமுனை ஏற்படுத்த இந்தியாவின் வெற்றிக்கான வாய்ப்பு அதிகரித்தது.

அடுத்தடுத்த விக்கெட் சரிவுகளில், மறுமுனையில் இருந்த ஜாக் கிராவ்லி தனது தாக்குதல் பாணியை ஆட்டத்தை விடுத்து பொறுமையை கடைபிடித்தார். எனினும், 73 ரன்கள் எடுத்த அவரை குல்தீப் யாதவ் விக்கெட்டாக்கினார். ஜானி பேர்ஸ்டோவ்வை நிலைக்கவிடாமல் 26 ரன்களில் பும்ரா அவுட் ஆக்கினார்.

மிகவும் எதிர்பார்த்த இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸை ஸ்ரேயஸ் ஐயர் ரன் அவுட் செய்தார். இதன்பின் வந்த பென் ஃபோக்ஸ் - டாம் ஹார்ட்லி இணை 50 ரன்கள் பார்ட்னர்ஷிப் மூலம் சேர்த்தது. இருவரும் தலா 36 ரன்கள் எடுத்து விக்கெட் சரிவை தடுத்தாலும், பும்ரா தனது அசத்தல் பந்துவீச்சால் இருவரின் விக்கெட்டையும் அடுத்த ஓவர்களில் வீழ்த்தினார்.

இதன்பின் இங்கிலாந்து அணி 292 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து தோல்வியை தழுவியது. இதனால் இந்திய அணி 106 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இந்திய அணி தரப்பில் பும்ரா, அஸ்வின் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் டெஸ்ட் தொடர் 1 - 1 என்று சமன் ஆகியுள்ளது. இந்தப் போட்டியில் மொத்தமாக 9 விக்கெட் வீழ்த்தி இந்திய அணி வெற்றிபெற உதவிய ஜஸ்ப்ரீத் பும்ரா ஆட்ட நாயகனாக தேர்வுசெய்யப்பட்டார்.

## எங்க அணியின் சாம்பியன் பிளேயர் இவர்தான் வெற்றிக்கு பின் ரோகித் சர்மா பேட்டி

**விசாகப்பட்டினம் : பிப். 6,**
**யஷஸ்வி ஜெய்ஸ்வால் ஒரு மிகச்சிறந்த வீரராக மாறி வருகிறார் என ரோகித் கூறினார்.**



இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இரு அணிகளுக்கும் இடையே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையேயான 2-வது போட்டி விசாகப்பட்டினத்தில் கடந்த 2ம் தேதி தொடங்கியது. இந்த ஆட்டத்தில் இங்கிலாந்தை 106 ரன் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா வெற்றி பெற்றது.

இந்நிலையில் இந்த போட்டியில் அடைந்த வெற்றிக்கு பின் இந்திய கேப்டன் ரோகித் சர்மா அளித்த பேட்டியில் கூறியதாவது, எங்களது அணியின் சாம்பியன் பிளேயர் ஜஸ்ப்ரீத் பும்ரா. முக்கியமான போட்டிகளில் அவர் இதேபோன்ற செயல்பாடுகளை தொடர்ச்சியாக எங்களுக்கு வழங்கி வருகிறார். இதுபோன்ற போட்டிகளில் வெற்றி பெற வேண்டுமெனில் அணியின் ஒட்டு மொத்த வீரர்களின் சிறப்பான ஆட்டமும் வெளிப்பட வேண்டும்.

அந்த வகையில் இந்த போட்டியில் நாங்கள் அனைத்து துறைகளிலும் சிறப்பாக செயல்பட்டதாக உணர்கிறேன். டெஸ்ட் கிரிக்கெட்டில் அதுவும் இதுபோன்ற ஒரு சவாலான ஆடுகளத்தில் பந்துவீச்சாளர்கள் முன் வந்து சிறப்பாக பந்துவீச வேண்டும். அந்த வகையில் அனைவருமே சிறப்பாக செயல்பட்டுள்ளனர். யஷஸ்வி ஜெய்ஸ்வால் ஒரு மிகச்சிறந்த வீரராக மாறி வருகிறார்.

போட்டியின் சூழ்நிலை நன்றாக புரிந்து கொண்டு மிகச் சிறப்பாக விளையாடுகிறார். இன்னும் அவர் இந்திய அணியில் நிறைய தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. அவருக்கு நாங்கள் நிறைய சலுகைகளை வழங்கியுள்ளோம். அதையெல்லாம் எடுத்துக்கொண்டு அவர் இதேபோன்று தொடர்ச்சியாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று கூறினார்.

## ஜாம்பவான்கள் பி.எஸ்.சந்திரசேகர், அனில் கும்ப்ளேவை தாண்டி வரலாற்று சாதனை படைத்த அஸ்வின்

**விசாகப்பட்டினம் : பிப். 6,**
**இந்தியா - இங்கிலாந்து இடையேயான 2-வது டெஸ்ட் போட்டியின் 4-வது நாள் ஆட்டத்தின்போது அஸ்வின் இந்த சாதனையை படைத்துள்ளார்.**



இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இரு அணிகளுக்கும் இடையே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையேயான 2-வது போட்டி விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. அதன்படி பேட்டிங் செய்த இந்திய அணி தனது முதல் இன்னிங்சில் 396 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதனையடுத்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து 253 ரன்களில் ஆல் அவுட் ஆனது.

பின்னர் 143 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி சுப்மன் கில் சதத்தின் உதவியுடன் 255 ரன்கள் அடித்தது. இதன் மூலம் இங்கிலாந்து அணிக்கு 399 ரன்களை இலக்காக நிர்ணயம் செய்துள்ளது இந்தியா.

இதனையடுத்து 399 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து 3-வது நாளில் 1 விக்கெட் இழப்பிற்கு 67 ரன்கள் அடித்திருந்தது. ஜாக் கிராலி 29 ரன்களுடனும், ரெஹான் அகமது 9 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். இந்தியா தரப்பில் அஸ்வின் 1 விக்கெட் வீழ்த்தியிருந்தார்.

இந்நிலையில் 4-வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து பேட்டிங் செய்த இங்கிலாந்து வீரர்களில் ஒல்லி போப் மற்றும் ஜோ ரூட் ஆகியோரின் விக்கெட்டுகளை அஸ்வின் கைப்பற்றினார். இதில் ஒல்லி போப் விக்கெட்டை வீழ்த்தியபோது இந்திய ஜாம்பவான்கள் பி.எஸ்.சந்திரசேகர், அனில் கும்ப்ளேவை தாண்டி அஸ்வின் வரலாற்று சாதனை ஒன்றை படைத்தார். அதாவது இந்தியா - இங்கிலாந்து இடையேயான டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்திய இந்திய வீரர்கள் பட்டியலில் ஜாம்பவான்கள் பி.எஸ்.சந்திரசேகர், அனில் கும்ப்ளேவை தாண்டி முதலிடத்தை பிடித்து அஸ்வின் சாதனை படைத்துள்ளார்.

அந்த பட்டியல் படி : அஸ்வின் - 96 விக்கெட்டுகள், பி.எஸ்.சந்திரசேகர் - 95 விக்கெட்டுகள், அனில் கும்ப்ளே - 92 விக்கெட்டுகள், பி.எஸ்.பேடி/ கபில் தேவ்- 85 விக்கெட்டுகள், இஷாந்த் சர்மா - 67 விக்கெட்டுகள்.

## '2 சைரனுக்கு இடையில் நடக்கும் மோதல்' – இயக்குநர் அந்தோணி பாக்யராஜ்

**சென்னை : பிப். 6,**
**"விஸ்வாசம், இரும்புத்திரைன்னு ஆறேழு படங்களுக்கு ரைட்டரா ஒர்க் பண்ணியிருக்கேன். நான் வேலை பார்த்த படங்களுக்கு ரூபன் சார்தான் எடிட்டர். ஒரு கதை டிஸ்கஷனுக்காக அவர் ஆபீஸ் போனேன். அவர்கிட்ட பேசிட்டிருக்கும்போது நானும் தனியா படம் பண்ண ட்ரை பண்ணிட்டிருக்கேன்னு சொன்னேன். அப்ப, 'ஜெயம் ரவி சாருக்கு உங்கக் கதை செட்டாகுமா'ன்னு கேட்டார். புதுசா இருக்கும்னு சொன்னேன். உடனே தயாரிப்பாளர் சுஜாதா விஜயகுமாருக்கு போன் பண்ணினார். அவங்க மூலமா ஜெயம் ரவி சாருக்கு கதை சொன்னேன். அவருக்குப் பிடிச்சிருந்தது. ஆரம்பிச்சுட்டோம்" என்கிறார் 'சைரன்' படம் மூலம் இயக்குநராக அறிமுகமாகும் அந்தோணி பாக்யராஜ்.**



ஜெயம் ரவி, கீர்த்தி சுரேஷ், அனுபமா பரமேஸ்வரன், யோகிபாபு உட்பட பலர் நடித்திருக்கும் இந்தப் படம் வரும் 16-ம் தேதி வெளியாக இருக்கிறது.

'சைரன்'ன்னு சொல்லும்போதே அந்த சத்தத்தை நாம உணர முடியும். இந்த டைட்டிலுக்கான பிளஸ்பாயின்ட் அதுதான். 'சைரன்' ஆம்புலன்ஸையும் போலீஸ் வாகனத்தையும் குறிக்கும். இந்த ரெண்டு சைரனுக்கும் இடையில நடக்கிற கதைதான் படம். அதாவது உயிரைக் காப்பாற்றக் கூடிய ஆம்புலன்ஸ் டிரைவர், ஏன் சிறைக்குப் போறான், ஏன் பரோல்ல வெளியே வர்றான் அப்படிங்கறதுதான் கதை. ஜெயம் ரவி சார் இதுவரை மெச்சூர்ட் கேரக்டர் பண்ணினதில்லைனு நினைக்கிறேன். அவரை ஜாலியா பார்த்திருப்போம். ஆக்ஷன் ஹீரோவா பார்த்திருப்போம். ஒரு நடுத்தர வயதுக்காரரா, சால்ட் அண்ட் பெப்பெர் லுக்ல பார்த்ததில்லை. இதுல அந்த வித்தியாசத்தைப் பார்க்க முடியும். நடிக்கிறதுக்கு அதிக வாய்ப்புள்ள படம் இது. அதை சிறப்பா பண்ணியிருக்கார்.

இந்தக் கதையில, ரவி சாருக்கு இரண்டு தோற்றம் இருக்கு. அவர் ஸ்மார்ட்டான ஹீரோ. ரொம்ப இளமையா இருப்பார். ஒரு தோற்றத்துக்கு அவரை 45-வயசுக்காரரா காண்பிக்க வேண்டியிருந்தது. முதல்ல இளமையான தோற்றத்துல இருக்கிற காட்சிகளை ஷூட் பண்ணிட்டோம். படம் ஆரம்பிக்கும்போது, அவர் 'பொன்னியின் செல்வன்' உட்பட சில படங்கள்ல நடிச்சுட்டு இருந்தார். அதை முடிச்சுட்டு வர்றதுக்காகக் காத்திருந்தோம். அதுக்கு கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆயிடுச்சு. அவர் வந்த பிறகு சால்ட் அண்ட் பெப்பர் லுக் கேரக்டருக்கான படப்பிடிப்பை ஆரம்பிச்சோம்.

இந்த திரைக்கதை 'நான் லீனியர்' முறைப்படி முன்னும் பின்னுமா போகும். அதனால, ஒரு குறிப்பிட்ட ஒரு இடத்துல பிளாஷ்பேக் ஆரம்பிக்கும்னு சொல்ல முடியாது. இயல்பான கதையோட்டமாகவே இருக்கும். கதை சொல்லும் விதத்துல வித்தியாசம் இருக்கும்.

ரெண்டு ஹீரோயின். ரவி சார் ஜோடியா அனுபமா நடிக்கிறாங்க. கீர்த்தி சுரேஷ் போலீஸா வர்றாங்க. கீர்த்தி சுரேஷும் ஹீரோவும் எதிரெதிர் துருவம். வில்லன்களை மீறி இவங்களுக்குள்ள நடக்கிற மோதல் சீரியஸாக இருக்கும். கீர்த்தி சுரேஷ் இதுவரை நடிச்சதுல இருந்து இதுல வேறுபட்ட நடிப்பை பார்க்கலாம்.

ஃபேமிலி விஷயங்கள் இருக்கும். சென்டிமென்ட், குடும்பத்துக்குள்ள நடக்கிற சம்பவங்கள் எல்லாமே ரசனையா இருக்கும். அதுக்குள்ள ஒரு மெசேஜ் இருக்கு. அந்த மெசேஜ் குடும்பங்களுக்கான விஷயமா இருக்கும். யோகிபாபுவுக்கு படம் முழுவதும் டிராவல் பண்ற கேரக்டர். காமெடி டிராக் அப்படின்னு இல்லாம கதையோட வர்ற மாதிரி இருக்கும். அழகம் பெருமாள், சமுத்திரக்கனி உட்பட நிறைய பேர் நடிச்சிருக்காங்க. கண்டிப்பாக இந்தப் படம் ரசிகர்களுக்கு புது அனுபவத்தைக் கொடுக்கும்.

வரலாறு சினிமா

## டெவில் – திரை விமர்சனம்

**சென்னை : பிப். 6,**
**ஹேமா (பூர்ணா) ஓட்டிவரும் கார், ரோஷன் (திருகுன்) மீது மோதியதால் அவருக்கு கையில் எலும்பு முறிவு ஏற்படுகிறது. இதனால் ரோஷனுக்கு உதவுகிறாள் ஹேமா. ஒருகட்டத்தில் அது நெருக்கமான நட்பாக உருவெடுக்கிறது.**



ஹேமாவின் கணவன் அலெக்ஸ் (விதார்த்), தன் அலுவலகத்தில் பணியாற்றும் சோஃபியுடன் தொடர்பில் இருக்கிறான். இதனால் ஹேமாவைப் புறக்கணிக்கிறான். ஒரு கட்டத்தில் சோஃபியிடமிருந்து விலகி ஹேமாவிடம் வருகிறான். இதற்குப் பிறகும் ஹேமாவின் வாழ்வில் ரோஷன் குறுக்கிட, இவர்கள் மூவரின் வாழ்வு என்னவாகிறது என்பது மீதிக் கதை.

'சவரக்கத்தி'க்குப் பிறகு மிஷ்கினின் தம்பி ஆதித்யா இயக்கியிருக்கும் படம் இது. இந்தப் படத்தின் மேன்மையான உருவாக்கத்திலும் தொழில்நுட்பத் தரத்திலும் மிஷ்கினின் தாக்கம் தெரிகிறது. பல விஷயங்களை வசனங்களாகச் சொல்லாமல் காட்சிகளாகக் காண்பித்திருப்பது நன்றாக இருக்கிறது.

ஆனால் படத்தின் கதையும், திரைக்கதையும் பெரும் ஏமாற்றம் அளிக்கின்றன. முதல் பாதியில் ரோஷனுக்கும், ஹேமாவுக்கும் நட்பு உருவாவதைச் சொல்லும் காட்சிகள் ஓரளவு ரசிக்க வைக்கின்றன. ஆனால் அலெக்ஸின் வருகைக்குப் பிறகு நிகழும் திருப்பங்களுக்கு வலுவான காரணங்கள் சொல்லப்படவில்லை. இதனால் முதன்மைக் கதாபாத்திரங்களுடன் ஒன்ற முடியவில்லை. இரண்டாம் பாதியின் பிற்பகுதியில் த்ரில்லர், ஹாரர் ஜானருக்கு மாறும்போது சற்று எதிர்பார்க்க வைத்தாலும் அதுவும் விரைவில் நீர்த்துப்போகிறது. கனவு, அமானுஷ்யம், ஆன்மீகம் என்று பல விஷயங்களைக் கலந்து குழப்பியடித்திருக்கிறார்கள்.

இந்தக் குறைகளைக் கடந்து ஹேமா கதாபாத்திரத்தையும் சிறப்பாக நடித்திருக்கும் பூர்ணாவையும் ரசிக்க முடிகிறது. விதார்த், திருகுன் இருவரும் குறைசொல்ல முடியாத நடிப்பைத் தந்திருக்கிறார்கள்.

மிஷ்கினின் பின்னணி இசை, காட்சிகளுக்கு வலுசேர்க்கின்றன. பாடல்கள் தேவையற்றத் திணிப்பு. கார்த்திக் முத்துக்குமாரின் ஒளிப்பதிவு படத்துக்குப் பலம். பதற்றத்தைத் தக்கவைப்பதில் இளையராஜாவின் படத்தொகுப்பு தக்க துணைபுரிந்திருக்கிறது. உருவாக்கத்தில் கவர்ந்தாலும் உள்ளடக்கத்தில் ஏமாற்றியிருக்கிறது 'டெவில்'

## கிராமி விருது வென்றது சங்கர் மகாதேவன், ஜாகிர் ஹுசைனின் 'சக்தி பேண்ட்'

**லாஸ் ஏஞ்சல்ஸ் : பிப். 6,**
**சங்கர் மகாதேவன் மற்றும் ஜாகிர் ஹுசைனின் 'சக்தி பேண்ட்' இசை விருதுகளில் உயரிய விருதுக்கான கிராமி விருதை வென்றது. குளோபல் மியூசிக் ஆல்பம் பிரிவில் கிராமி விருது அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.**




இசைக்கலைஞர்களைக் கவுரவிக்கும் விதமாக, அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் கிராமி விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இசைத்துறையின் உயரிய விருதாகக் கருதப்படும் இதில் பல்வேறு பிரிவுகளில் சிறந்த முறையில் பங்காற்றியவர்களுக்கு விருதுகள் வழங்கப்படும்.

இதன், 66-வது விருதுகள் வழங்கும் விழா லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இசைக்கலைஞர்கள் கலந்துகொண்டனர். இந்த விழாவில் இந்தியாவின் ஜாகிர் உசேன் மற்றும் சங்கர் மகாதேவனின் ஃபியூஷன் இசைக்குழுவான சக்தி இசைக்குழுவுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. சிறந்த உலகளாவிய இசை ஆல்பம் பிரிவில் விருதுகள் வென்றனர் ஜாகிர் உசேன் மற்றும் சங்கர் மகாதேவன் அடங்கிய சக்தி குழு. இவர்களின் சமீபத்திய இசை ஆல்பமான 'திஸ் மொமென்ட்' சிறந்த உலகளாவிய இசை ஆல்பம் பிரிவில் விருதைப் பெற்றது.

சங்கர் மகாதேவன், ஜாகீர் உசேன் மற்றும் அவரது குழு உறுப்பினர்கள் கிராமி விருதை பெற்றுக்கொண்டனர். விருதுக்கு பின் பேசிய சங்கர் மகாதேவன் "கடவுள், குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் இந்தியாவுக்கு நன்றி. நாங்கள் இந்தியாவை நினைத்து பெருமை கொள்கிறோம். எனது மனைவிக்கு இந்த விருதை அர்ப்பணிக்க விரும்புகிறேன்" என்று நெகிழ்ச்சியாக பேசினார். அவர் விருதுக்கு நன்றி தெரிவிக்கும் வீடியோக்கள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



# வரலாறு உலகம்

## சிலி நாட்டில் பரவி வரும் காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 112 ஆக உயர்வு



**வல்பரைசோ : பிப். 6,**

**தென் அமெரிக்க நாடான சிலியில் பரவி வரும் காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 112 ஆக உயர்ந்துள்ளது. மேலும் நூற்றுக்கணக் கானவர்களைக் காணவில்லை என்று அந்நாட்டு அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.**

சிலி நாட்டின் வல்பரைசோ பகுதியில் உள்ள வனப்பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் திடீரென காட்டுத் தீ ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக பல ஆயிரக்கணக்கான வீடுகள் பற்றி எரிந்து தீக்கிரையாகியுள்ளன. உடனடியாக தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து, மீட்புப் பணிகள் மும்முரமாக்கப் பட்டிருக்கிறது.

எனினும், இந்தக் கொடிய காட்டுத் தீயில் 1931-ல் நிறுவப்பட்ட பிரபல தாவரவியல் பூங்கா ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தீக்கிரையானது. சிலியில் ஏற்பட்டிருக்கும் காட்டுத் தீயானது, மற்ற லத்தீன் அமெரிக்க நாடுகளையும் பாதித்துள்ளது. சிலியின் கரையோர நகரங்களில் புகை சூழ்ந்ததால் அவசர நிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது, முக்கிய பகுதிகளில் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. புகை மற்றும் தீப்பிழம்புகள் வினா டெல் மார் என்ற நகரைச் சுற்றியுள்ள சுற்றுப்புறங்களை சூழ்ந்தன. சில குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளில் சிக்கிக்கொண்டனர். அதே நேரத்தில் வினா டெல் மார் என்ற நகரைச் சுற்றியுள்ள பகுதியில் 200 பேர் காணாமல் போயுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்நாட்டு ஜனாதிபதி கேப்ரியல் போரிக் இந்த சம்பவம் குறித்து பேசுகையில், “தீயினால் பாதிக்கப்பட்டவர்களின் நினைவாக நேற்றும், இன்றும் தேசிய துக்க நாட்களாக அனுசரிக்கப்படும். இறப்பு எண்ணிக்கை அதிகரிக்க கூடும்” என்று அறிவித்தார். வல்பரைசோ பிராந்தியத்தின் ஆளுநர் ரோட்ரிகோ முண்டாகா, வினா டெல் மார், குயில்பூ, வில்லா அலெமனா மற்றும் லிமாச்சே ஆகிய நகரங்களில் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்படுவதாக அறிவித்தார். இதனால் அதிகாரிகள் தீயை அணைப்பதில் கவனம் செலுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் இது குறித்து கூறியிருப்பதாவது, “தென் அமெரிக்க நாடான சிலியில் ஏற்பட்ட பயங்கர காட்டுத்தீயில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 112 ஆக அதிகரித்துள்ளது. 32 உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன” எனத் தெரிவித்துள்ளார். சிலியில் பிப்ரவரி 2023 ஆண்டு ஏற்பட்ட காட்டுத்தீயில் 4,00,000 ஹெக்டேர் நாசமாகியது. அதில் 22க்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் வெப்பமயமாதல் காரணமாக, காட்டுத்தீ போன்ற இயற்கைசீற்றங்கள் அதிகமாக ஏற்பட வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

## இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் வேதனை
## இனவெறியின் வலியை சிறு வயதில் அனுபவித்தேன்



**லண்டன் : பிப். 6,**

**‘சிறுவயதில் நானும் இனவெறியின் வலியை அனுபவித்துள்ளேன்’ என இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் வேதனையுடன் கூறி உள்ளார்.**

இங்கிலாந்தில் 210 ஆண்டுகால வரலாற்றில் பிரதமரான முதல் இந்திய வம்சாவளி, இந்து மதத்தை சேர்ந்தவர், இளம் பிரதமர் என பல்வேறு பெருமைகளுக்கு சொந்தக்காரர் ரிஷி சுனக். இவரும் சிறு வயதில் இனவெறியை எதிர்கொண்டுள்ளதாக தனது வேதனையாக அனுபவத்தை பகிர்ந்துள்ளார். சுனக்கின் தாத்தா, பாட்டி இருவரும் கிழக்கு ஆப்ரிக்காவுக்கு புலம்பெயர்ந்து பின் 1960களில் இங்கிலாந்துக்கு குடியேறிவர்கள். இந்நிலையில், ஐடிவி நியூஸ் சேனலில் பேட்டி அளித்த சுனக், “சிறுவயதில் நானும் இனவெறியை அனுபவித்துள்ளேன். என்னுடைய தம்பியையும், தங்கையையும் சிலர் மோசமாக விமர்சிப்பதை கேட்டு வேதனை அடைந்துள்ளேன்.

நாங்கள் வித்தியாசமானவர்கள் என்ற எண்ணம் எங்களுக்குள் இருந்து கொண்டே இருக்கும். நாங்கள் பேசும் போது எங்களின் உச்சரிப்பில் எந்த வித்தியாசமும் தெரிந்து விடக்கூடாது என்பதில் என் அம்மா கூடுதல் கவனம் செலுத்தினார். இதற்காக சிறப்பு வகுப்புகளுக்கு எங்களை அனுப்பி சரியாக பேச பயிற்சி கொடுக்கச் செய்தார். நாங்கள் வார்த்தைகளை சரியாக உச்சரிப்பதையே அவர் விரும்பினார். இதற்கு முன், சிறுபான்மையினர் ஒருவர் இங்கிலாந்தில் பிரதமராக வந்ததில்லை. எனவே அப்படி ஒருவர் பிரதமர் ஆவார் என்பதை நான் கனவிலும் நினைக்கவில்லை. எந்தவிதமான இனவெறியும் ஏற்றுக்கொள்ள முடியாதது. நான் சந்தித்த வேதனையான அனுபவங்களை என் பிள்ளைகள் எதிர்கொள்ள மாட்டார்கள் என நம்புகிறேன்” என்றார்.

## “ஜி ஜின்பிங் எனக்கு நல்ல நண்பர்தான்” டொனால்ட் டிரம்ப்




**அமெரிக்கா : பிப். 6,**

**இவ்வருட இறுதியில் அமெரிக்காவில் அதிபர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஜனநாயக கட்சியை சேர்ந்த தற்பொதைய அதிபர் ஜோ பைடனும், குடியரசு கட்சியை சேர்ந்த முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்பும் ஒருவரையொருவர் எதிர்த்து களம் இறங்கியுள்ளனர்.**

நாட்டின் முன் நிற்கும் சவால்கள் மற்றும் அவற்றிற்கு தாங்கள் பரிந்துரைக்கும் தீர்வுகள் குறித்து இருவரும் பல மாநிலங்களில் பிரசாரம் செய்து வாக்கு சேகரித்து வருகின்றனர். 2018ல், தனது பதவிக்காலத்தில் டொனால்ட் டிரம்ப், சீனாவிலிருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்களுக்கு 25 சதவீத இறக்குமதியை விதித்தார்.

இதற்கு பதிலடியாக சீன அதிபர் ஜி ஜின்பிங், அமெரிக்காவிலிருந்து தங்கள் நாட்டில் இறக்குமதியாகும் பொருட்களுக்கு அதிக வரி விதித்தார். உலக வர்த்தகத்தில் மிக பெரும் பொருளாதாரங்களான அமெரிக்காவிற்கும், சீனாவிற்கும் இடையே நிலவிய வரிவிதிப்பு போட்டியால் இரு நாட்டு உறவில் சிக்கல் நிலவியது.

இந்நிலையில், டொனால்ட் டிரம்பின் பிரசாரத்தின் போது அவரிடம் சீன அதிபர் ஜிஜின்பிங் மற்றும் சீன வர்த்தகம் குறித்து கேட்கப்பட்டது. அப்போது டிரம்ப் பதிலளித்ததாவது: தேவைப்பட்டால், அமெரிக்காவிற்கு சீனாவிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கப்பட வேண்டும் என்பதே என் விருப்பம்.

சீன அதிபர் ஜிஜின்பிங்கை எனக்கு பிடிக்கும். எனது பதவிக்காலத்தின் போது அவர் எனக்கு நல்ல நண்பராகத்தான் இருந்தார். அவருடன் என்னால் இணைந்து செயல்பட முடிந்தது. ஆனால், சீனாவிற்கு எதிராக நான் எடுத்த சில முடிவுகளை அவர் விரும்பியிருக்க வாய்ப்பில்லை. 3 வருடங்களுக்கு முன்பு வரை, அயல்நாட்டு தலைவர்கள், நம் நாட்டை மிகவும் மதிப்புடன் பார்த்தார்கள். ஆனால், இன்று (பைடன் ஆட்சிக்காலத்தில்) நமது நாட்டை ஒரு கேலிப்பொருளாக எண்ணுகின்றனர் என்று அவர் கூறினார்.

தனது பிரசாரங்களின் போது, தற்போது சீனாவிற்கு “அதிக முன்னுரிமை தரப்படும் நாடு” எனும் அந்தஸ்து தரப்படுவதை, திரும்ப பெறுவது குறித்து பரிசீலிக்கப்படும் என டிரம்ப் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## மே மாதத்துக்குள் இந்திய படைகள் வெளியேறும்
## நாடாளுமன்றத்தில் மாலத்தீவு அதிபர் முகம்மது மொய்சு உறுதி



**மாலி : பிப். 6,**

**வரும் மே மாதத்துக்குள் இந்திய படைகள் மாலத்தீவில் இருந்து வெளியேறும் என்று அந்நாட்டு அதிபர் முகம்மது மொய்சு அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

சீன ஆதரவாளராக அறியப்படும் முகம்மது மொய்சு, மாலத்தீவு அதிபரானதை அடுத்து அந்நாட்டில் இருக்கும் இந்திய ராணுவத்தை வெளியேற்றுவதில் தீவிரம் காட்டி வருகிறார். இந்நிலையில், நேற்று அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றிய முகம்மது மொய்சு, மாலத்தீவு விவகாரங்களில் தலையிடவோ, அதன் இறையாண்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தவோ எந்த நாட்டையும் அனுமதிக்க முடியாது. மாலத்தீவின் மூன்று விமான தளங்களில் இந்திய துருப்புகள் உள்ளன. அவற்றில் ஒரு விமான தளத்தில் உள்ள இந்திய துருப்புகள் மார்ச் 10ம் தேதிக்குள் வெளியேறிவிடுவார்கள். மற்ற இரண்டு விமான தளங்களில் உள்ள இந்திய துருப்புகள் மே 10ம் தேதிக்குள் வெளியேறிவிடுவார்கள். இதற்கான ஒப்பந்தம் இந்தியா - மாலத்தீவு இடையே மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

முகம்மது மொய்சுவின் இந்த நடவடிக்கைக்கு மாலத்தீவின் இரு பெரும் எதிர்க்கட்சிகளான எம்டிபி மற்றும் ஜனநாயகக் கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. அதிபர் நாடாளுமன்றத்தில் பேசும்போது, எம்டிபியின் 43 உறுப்பினர்கள் மற்றும் ஜனநாயகக் கட்சியின் 13 உறுப்பினர்கள் என 56 உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர். முகம்மது மொய்சு பேசும்போது அவையில் 24 உறுப்பினர்கள் மட்டுமே இருந்துள்ளனர். இது மாலத்தீவு நாடாளுமன்ற வரலாற்றில் அதிபரின் உரைக்கு ஏற்பட்ட மிகப் பெரிய பின்னடைவாகக் கருதப்படுகிறது. முகம்மது மொய்சுவின் இந்திய விரோதப் போக்கு தவறானது என கூறி வரும் எடிபி மற்றும் ஜனநாயகக் கட்சி ஆகியவை, அதிபர் முகம்மது மொய்சுவை பதவிநீக்கம் செய்ய முயன்று வருகின்றன.

மாலத்தீவில் 87 இந்திய துருப்புகள் உள்ளன. அவை, அந்நாட்டில் மனிதாபிமான உதவிகளையும் மருத்துவ உதவிகளையும் செய்து வருகின்றன. படைகளை இந்தியா திரும்பப் பெற்றாலும், விமானப்படைத் தளங்களை தொடர்ந்து பயன்படுத்த மாலத்தீவு உடன் இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை கூறி இருப்பதாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## பாகிஸ்தானில் காவல் நிலையம் மீது பயங்கரவாதிகள் தாக்குதலில் 10 போலீசார் உயிரிழப்பு



**பக்துன்வா : பிப். 6,**

**பாகிஸ்தானின் கைபர் பக்துன்வா மாகாணத்தில் உள்ளது டெரா இஸ்மாயில் கான் மாவட்டம். இந்த மாவட்டத்தின் தராபன் தாலுகாவில் உள்ள காவல் நிலையம் மீது நேற்று அதிகாலை 3 மணியளவில் பயங்கரவாதிகள் கடும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.**

இநத் தாக்குதலில் காவல் நிலையத்தில் இருந்த 10 போலீசார் பரிதாபமாக உயிரிழந்தனர். 6 காயம் அடைந்தனர். பயங்கரவாதிகள் கடுமையான ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது. காவல் நிலையத்தை சுற்றி வளைத்து கையெறி குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்திய நிலையில், துப்பாக்கிச்சூடும் நடத்தியுள்ளனர்.


போலீஸ் தரப்பில் தக்க பதிலடி கொடுக்கப்பட்டதாகவும், அதிகாலை நேரம் என்பதால் அவர்கள் தப்பி ஓடி விட்டதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போலீசார் அந்த பகுதியை சுற்றி வளைத்து பயங்கரவாதிகள் தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பயங்கரவாதிகளை வேட்டையாடுவதற்கான அதிகப்படியான வீரர்கள் அப்பகுதிக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் மட்டும் 93 தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும், இதில் 90 பொதுமக்கள் உயிரிழந்ததாகவும், 135 பேர் காயம் அடைந்ததாகவும் செய்தி நிறுவனம் ஒன்ற செய்தி வெளியிட்டுள்ளது. மேலும், 15 தனிநபர்கள் கடத்தப்பட்டுள்ளனர். பாகிஸ்தானில் வருகிற 8-ந்தேதி பொதுத்தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகிறது. இந்த சூழ்நிலையில் சில நாட்களாக அந்த நாட்டில் பல இடங்களில் வன்முறை சம்பவங்களும், குண்டு வெடிப்புகளும் நடந்து வருவது பதற்றத்தை அதிகரித்து உள்ளது.

கடந்த வாரம் கராச்சியில் உள்ள தேர்தல் ஆணைய அலுவலகம் அருகே குண்டு வெடித்தது. இந்த குண்டு வெடிப்பில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இதன் தொடர்ச்சியாக பலுசிஸ்தான் மாகாணம் கலாட் நகர் முசுல் சராட் பகுதியில் உள்ள தேர்தல் அலுவலக கட்டிடத்தை குறி வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் கையெறி குண்டுகளை வீசி விட்டு தப்பினார்கள்.

இந்த குண்டு அலுவலக கட்டிடம் அருகே விழுந்து வெடித்தது. இந்த சம்பவத்தில் பாகிஸ்தான் மக்கள் கட்சியை சேர்ந்த 6 தொண்டர்கள் படுகாயம் அடைந்தனர். இதுபற்றி அறிந்ததும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டனர். அந்த பகுதியை சீல் வைத்து தங்கள் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தனர். வெடித்த குண்டு எந்த வகையை சேர்ந்தது என்று தெரியவில்லை. அதனை போலீசார் ஆய்வுக்காக அனுப்பி வைத்தனர். குண்டு வீசிய மர்ம மனிதர்களை தேடி வருகின்றனர். தொடர் குண்டு வெடிப்பு சம்பவங்களை தொடர்ந்து பாகிஸ்தான் முழுவதும் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## 3 மடங்கு கட்டண உயர்வுக்கு சம்மதித்த பாரிஸ் நகர மக்கள்



**பிரான்ஸ் : பிப். 6,**

**மேற்கத்திய நாடுகளில் பொது போக்குவரத்திற்கான அரசு வாகனங்கள் குறைவு. மக்களில் பெரும்பாலானோர், கார்களையே தங்கள் போக்குவரத்திற்கு பயன்படுத்துகின்றனர்.**

சமீப சில வருடங்களாக, உலகளவில் எஸ்யூவி எனப்படும் கார்களின் உற்பத்தி அதிகமாகி விட்டது. அவற்றில் அமரும் இட வசதி, பயணிப்பவர்களுக்கான எண்ணிக்கை, பொருட்களுக்கான இடம் உள்ளிட்டவை சிறிய கார்களை விட அதிகம். மேலும், இவை நீண்ட தூர பயணத்திற்கும், கரடுமுரடான சாலைகளிலும் செலுத்துவதற்கு தகுதி வாய்ந்தவை.

எனவே, பெரும்பாலான மக்கள் எஸ்யூவிரக கார்களையே விரும்பி வாங்குகின்றனர். ஆனால், இவற்றை நிறுத்த அதிக இடம் தேவைப்படும். இந்நிலையில், பாரிஸ் நகரில் வாகன நிறுத்துமிடங்களில் இது சிக்கலை தோற்றுவித்ததால், இவற்றிற்கான வாகன நிறுத்த கட்டணத்தை அதிகரிக்க உத்தேசித்த அரசு, இது குறித்து மக்களின் எண்ணத்தை அறிய பொதுஜன வாக்கெடுப்பு நடத்தியது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த பொதுஜன வாக்கெடுப்பில், சுமார் 54.5 சதவீத மக்கள் கட்டண அதிகரிப்பிற்கு சம்மதித்துள்ளனர். இதன்படி, பாரிஸ் நகரத்திற்கு உள்ளே, 1.6 டன் மற்றும் கூடுதலான எடையுள்ள வாகனங்களுக்கு சாலையோர வாகன நிறுத்துமிடங்களில் ஒரு மணி நேரத்திற்கு கட்டணம், சுமார் ரூ.1600 (18 யூரோக்கள்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டண விகிதம், முன்பிருந்ததை காட்டிலும் 3 மடங்கு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இது, தினந்தோறும் பல வெளியூர்களில் இருந்து பாரிஸ் நகருக்கு பல்வேறு பணிகளுக்காக வருபவர்களுக்கு மட்டும் பொருந்தும். பாரிஸ் நகரிலேயே வசிப்பவர்களுக்கான கட்டணம் மாற்றப்படாததால், அவர்களுக்கு பாதிப்பு எதுவும் இல்லை. பாரிஸ் நகர மேயர், ஆன் ஹிடால்கோ, இதுவரை தனது 10-வருட பதவிக்காலத்தில், நகரின் பல இடங்களை பாதசாரிகளுக்கு சாதகமாகவும், சைக்கிள் போக்குவரத்தை ஊக்கப்படுத்தும் விதமாகவும் மாற்றி அமைத்து வருகிறார்.

எஸ்யூவி ரக வாகனங்கள் விபத்தில் சிக்கும் போது உயிரிழப்புகள் அதிகமாவதாகவும், அவற்றின் பயன்பாட்டிற்கு அதிக எரிபொருள் தேவைப்படுவதாகவும் சுற்றுச்சூழல் வல்லுனர்கள் தெரிவித்து வந்த நிலையில், இந்த கட்டண உயர்வு பலராலும் வரவேற்கப்பட்டிருக்கிறது.

## நிறுவன இணைப்பு தொடர்பான குற்ற வழக்கு சாம்சங் தலைவர் லீ யாங் விடுவிப்பு



**சியோல் : பிப். 6,**

**சாம்சங் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவன தலைவர் லீ, 2015-ம் ஆண்டில் நடந்த நிதி குற்றங்கள் தொடர்புடைய வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டு உள்ளார்.**

கணினி உபபொருட்களான சிப்புகள் மற்றும் மொபைல் போன்கள் உள்ளிட்டவற்றை உற்பத்தி செய்ய கூடிய உலகின் மிக பெரிய நிறுவனங்களில் ஒன்றான சாம்சங்கின் தலைவராக லீ ஜே-யாங் (வயது 56) செயல்பட்டு வருகிறார்.

இவருடைய தந்தை லீ குன்-ஹீ மாரடைப்பால் மரணம் அடைந்த பின்னர், கடந்த 2014-ம் ஆண்டில் இருந்து சாம்சங் நிறுவனங்களை தலைமையேற்று நடத்தி வருகிறார். 2022-ம் ஆண்டு அக்டோபரில் முறைப்படி நிறுவன தலைவராக நியமிக்கப்பட்டார். இந்நிலையில், 2015-ம் ஆண்டு சாம்சங் சி அண்டு டி மற்றும் செயில் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனங்களை இணைத்ததில் அந்நாட்டு அரசுக்கு, லஞ்சம் கொடுத்து ஊழல் செய்ததில் தென்கொரிய அரசு கவிழ்ந்தது கவனிக்கத்தக்கது.

அவர் பங்கு விலைகளை அதிகரித்து காட்டியும், கணக்கு வழக்குகளில் மோசடி செய்தும் உள்ளார் என குற்றச்சாட்டு எழுந்தது. இந்த வழக்கில் 5 ஆண்டு சிறைதண்டனை வழங்கும்படி கோர்ட்டில் வழக்கறிஞர்கள் கோரினர். ஆனால், அது வழக்கம்போல் நடைபெற கூடிய வர்த்தக நடவடிக்கை என்றும், அதில் எந்த தவறும் செய்யவில்லை என்றும் கூறி குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு தெரிவித்து உள்ளார்.

2015-ம் ஆண்டு ஒப்பந்த வழக்கில், அப்போது அதிபராக இருந்த பார்க் கியூன்-ஹை என்பவருக்கு, லீ ரூ.53.16 கோடி லஞ்ச பணம் கொடுத்திருக்கிறார். இதனால், அரசின் ஆதரவை பெற்று நிறுவனங்களை இணைத்திருக்கிறார் என்பது குற்றச்சாட்டு. இந்த வழக்கில் 2017-ம் ஆண்டு குற்றவாளி என அறிவிக்கப்பட்டு, அவருக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. மொத்தம் 18 மாதங்கள் வரை அவர், சிறையில் இருந்துள்ளார்.

இதன்பின், 2021-ம் ஆண்டு பரோலில் விடுவிக்கப்பட்ட லீக்கு, 2022-ம் ஆண்டு ஆகஸ்டில், தென்கொரிய அதிபர் யூன் சுக் இயோல் மன்னிப்பு வழங்கினார். இந்த நிறுவன இணைப்புக்கு, பங்குகளை வாங்கிய சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். மக்கள் கொந்தளிப்பும் ஏற்பட்டது. சாம்சங் சி அண்டு டி நிறுவனத்தில் இருந்த தேசிய ஓய்வூதிய நிதியின் பங்குகள், கோடிக்கணக்கான மதிப்பில் சரிவை சந்தித்தன.

இதற்கு அப்போது அதிபராக இருந்த பார்க் நெருக்கடி கொடுத்துள்ளார். இதற்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அது பல மாதங்கள் நீடித்தது. பார்க் மற்றும் அவருடைய உதவியாளரும் ஊழலில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டனர்.

இதன் தொடர்ச்சியாக பதவியில் இருந்து பார்க் தூக்கியெறியப்பட்டார். இந்நிலையில், 2015-ம் ஆண்டு நடந்த ஊழல் வழக்கில் இருந்து லீ நேற்று விடுவிக்கப்பட்டு உள்ளார். இந்த நிலையில், அக்டோபர்-டிசம்பர் வரையிலான காலாண்டுக்கான லாபத்தில் 34% வருடாந்திர சரிவை சந்தித்தது என்று அந்நிறுவனம் கடந்த வாரம் தெரிவித்து இருந்தது.

## மக்களின் ஆதரவு இருந்ததால் பொருளாதார மீட்பு முயற்சியில் வெற்றி : இலங்கை அதிபர் சுதந்திர தின உரை




**கொழும்பு : பிப். 6,**

**‘பல இன்னல்கள் எதிர்கொண்ட போதிலும், மக்களின் உறுதியான ஆதரவு காரணமாக பொருளாதார மீட்பு முயற்சிகளில் நாடு வெற்றி கண்டுள்ளது’ என இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்கே சுதந்திர தின உரையில் குறிப்பிட்டார்.**

இலங்கையின் 76வது சுதந்திர தின விழா நேற்று முன்தினம் ஞாற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. இதையொட்டி அந்நாட்டு அதிபர் ரணில் விக்ரமசிங்கே நாட்டு மக்களுக்கு சுதந்திர தின உரையாற்றினார். அதில் அவர் கூறியிருப்பதாவது: கடந்த ஆண்டு சுதந்திர தினத்தை கொண்டாடிய போது நாடு திவாலானதாக முத்திரை குத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து விரிவான நீண்ட கால தேசிய மறுகட்டமைப்பு திட்டம் கொண்டு வரப்பட்டது.

இதில் பல இன்னல்கள் இருந்த போதிலும், அந்த சிரமங்களை சகித்துக் கொண்ட இலங்கை மக்களின் உறுதியான ஆதரவின் காரணமாக தற்போது பொருளாதார மீட்பு முயற்சிகளில் முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. இதே பாதையில் நாம் முன்னேறிச் சென்றால் கஷ்டங்கள் மறைந்துவிடும். வாழ்க்கை எளிதாகும். பொருளாதாரம் வலுவடையும் என்று அதிபர் விக்ரமசிங்கே கூறி உள்ளார்.

## ரஷிய ஹெலிகாப்டர் பயிற்சியின் போது ஏரியில் விழுந்து விபத்து



**மாஸ்கோ : பிப். 6,**

**விபத்திற்குள்ளான ஹெலிகாப்டரில் 3 பணியாளர்கள் இருந்ததாக கூறப்படுகிறது.**

கரேலியா மாகாணத்தில் ரஷிய ராணுவத்திற்கு சொந்தமான எம்ஐ-8 என்ற ஹெலிகாப்டர், மூன்று பணியாளர்களுடன் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது திடீரென விபத்துக்குள்ளானது. விபத்துக்குள்ளான ஹெலிகாப்டர் அந்த பகுதியில் உள்ள ஒனேகா ஏரியில் 50 அடி ஆழத்தில் மூழ்கி உள்ளதாக அந்நாட்டு விமானத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஹெலிகாப்டரின் பாகங்களை தேடும் பணியில் வீரர்கள் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஹெலிகாப்டரை அனுபம் வாய்ந்த விமானிகள் இயக்கியதாக அந்நாட்டு விமானத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஹெலிகாப்டரில் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பணியாளர்கள் என்ன ஆனார்கள் என்ற விவரம் ஏதும் வெளியிடப்படவில்லை.

# நாடாளுமன்ற தேர்தலில் இரட்டை இலையில் தான் போட்டி: புதுக்கோட்டையில் ஓபிஎஸ்





# ஜார்க்கண்ட் பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் சம்பாய் சோரன் அரசு வெற்றி

# கட்சி தாவும் 15 காங்கிரஸ் எம்எல்ஏ-க்கள் மகாராஷ்டிரா அரசியலில் பரபரப்பு



| சென்னை / புதுக்கோட்டை | 06.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|


புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

அரங்கசாமி நாயக்கர் , புதுவை விடுதலைப் போராட்ட வீரர், தமிழறிஞர் (பி.1884) (இ.1943)



பிறைசூடன் , தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர், கவிஞர், நடிகர் (பி.1956)



ஸ்ரீசாந்த் , இந்தியத் துடுப்பாளர் (பி.1983)



மாண்டேகு , ஆங்கிலேய அரசியல்வாதி, பிரித்தானியாவின் இந்தியாவுக்கான செயலாளர் (பி.1879) (இ.1924)



## இன்றைய நினைவு நாள்

சியாமா சாஸ்திரிகள் , கருநாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவர் (பி.1762) (இ.1827)



மோதிலால் நேரு , இந்திய அரசியல்வாதி (பி.1861) (இ.1931)



ஐக்கிய இராச்சியத்தின் ஆறாம் ஜோர்ஜ் (பி.1895) (இ.1952)



லதா மங்கேஷ்கர் , இந்தியப் பின்னணிப் பாடகி (பி.1929) (இ.2022)

